விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 20 வெள்ளிக்கிழமை (04.07.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 197

# இலங்கை-இந்தியா இடையே
# கச்சதீவு தொடர்பில் ஒப்பந்தம் இல்லை!
## பரபரப்புத் தகவல் வெளியாகியது

(புதுடில்லி)

*கச்சதீவில் மீன்பிடிப்பது தொடர்பாக இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையே எந்தவொரு ஒப்பந்தமும் இல்லை என இந்திய மத்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள தகவல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.*

சமூக சேவகர் ஒருவர், இந்திய மத்திய வெளிவிவகார அமைச்சில் இருந்து தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கச்சத்தீவு ஒப்பந்தத்தின் நகலொன்றை கோரியிருந்த நிலையில் இந்த தகவல் வெளியாகியுள்ளது.

தற்போதைய அரச ஆவணங்களின் பிரகாரம், இந்தியா-இலங்கை இடையில் கச்சத்தீவு தொடர்பாக எந்தவொரு ஒப்பந்தமும் இல்லை என இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளதாக த ஹிந்து செய்தி

19 ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.பல்கலைக்கு புதிய மருத்துவ பீடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு புதிதாக மருத்துவபீடம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க கூறியுள்ளார்.

கண்டி கிங்ஸ்வூட் கல்லூரியில் நேற்று நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரி

19 ஆம் பக்கம் பார்க்க....

## பீரிஸ் விரைவில் இந்தியா விஜயம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல்.பீரிஸ் இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ளார். இந்திய ஊடகங்கள் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளன.

அடுத்த வாரமளவில் அமைச்சர் பீரிஸ் இந்தியாவிற்கு விஜயம் செய்ய உள்ளார்.

20 ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதிக்கான செலவுகள் அதிகரிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செலவுக்காக இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை 34 கோடியே 64 லட்சத்து 64 ஆயிரத்து 210 ரூபாய் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த வரவு செலவுத் திட்டத்தின் ஜனாதிபதியின் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்ட 856 கோடியே 91 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் நிதிக்கு

19 ஆம் பக்கம் பார்க்க....




இனவாதத்திற்கும் மதவாதத்திற்கும் இனி இல்லை என்போம் எனும் தொனிப்பொருளில் சம உரிமை இயக் கம் ஏற்பாடு செய்திருந்த கையெழுத்து பெறும் நடவடிக்கை கொழும்பு கோட்டை புகையிர நிலையத்திற்கு முன்பாக நேற்று இடம்பெற்றமையை படத்தில் காணலாம்.

## ஒரே பிரசவத்தில் ஐந்து குழந்தைகள்

(கொழும்பு)

கண்டியில் பெண் ஒருவர் ஒரே பிரசவத்தில் ஐந்து குழந்தைகளை பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கண்டி வெரல்லாகம என்னும் இடத்தைச் சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு நேற்று ஒரே சூலில் ஐந்து குழந்தைகளை பிரசவித்துள்ளார்.

பத்து வருடங்களாக இந்தப் பெண் குழந்தை பாக்கியமின்றி அவதியுற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

20 ஆம் பக்கம் பார்க்க....

## முகமாலை மனித எச்சங்கள் பெண் விடுதலை புலிகளுடையது
### நேற்றும் எலும்புக் கூடுகள் மீட்பு



(கொழும்பு)

முகமாலையில் மீட்கப்பட்ட எலும்புக் கூடுகள் விடுதலைப் புலிகள் இயக்க சோதியா மற்றும் மாலதி படையணியின் பெண் புலிகளது என இனம் காணப்பட்டுள்ளது.

முகமாலையின் முன்னரங்கப் பகுதியில் நேற்றும் நேற்றுமுன்தினம் சீருடைகள், ஆயுதங்கள் உள்ளிட்ட

20 ஆம் பக்கம் பார்க்க....

## தமிழகத்தில் இலங். அகதிகள் 100 பேரைக் காணவில்லை
### அவுஸ்திரேலியா சென்றார்களா?

(சென்னை)

அவுஸ்திரேலியாவுக்கு தஞ்சம் கோரி படகில் பயணம் செய்த 153 இலங்கைத் தமிழர்களின் நிலை குறித்து கவலைகள் அதிகரித்து வரும் நிலையில், இதே காலகட்டத்தில் தமிழ்நாட்டில் வசிக்கும் இலங்கை அகதிகளில் சுமார் 100 பேர், காணாமல் போயிருக்கிறார்கள் என்று தமிழ்நாட்டிலிருந்து இயங்கும் ஈழ ஏதிலியர் அமைப்பு கூறுகிறது.

தமிழக முகாம்களில் இருந்து 57 பேரும், முகாமுக்கு வெளியே கீழ்ப் புத்துபட்டு என்ற ஒரு கிராமத்தில் வசித்த 40 பேரும் ஜூன் மத்தியிலிருந்து காணாமல் போயிருப்பதாகவும், இவர்களும், இந்தப் படகில் போயிருக்கலாம் என்று சந்தேகங்கள் இருப்பதாகவும், தமது அமைப்பின் கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளதாக, அந்த அமைப்பின் தலைவர் எஸ்.ஜி.சந்திரகாசன் பிபிசியிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது தவிர, இந்தப் படகில் மீதமுள்ளவர்கள் இலங்கையிலிருந்து நேரே வந்தவர்களாக இருக்கலாம்

இது ஒரு கணிப்பே தவிர, இது

19 ஆம் பக்கம் பார்க்க....

## வவு.கல்வீரங்குளத்தில் கிளைமோர் குண்டுகள்



(வவுனியா)

வவுனியா சிதம்பரபுரம் வீதியில் உள்ள கல்வீரங்குளத்தில் நேற்று மாலை மூன்று கிளைமோர் குண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. பிரதேச மக்கள் வழங்கிய தகவலை அடுத்து வவுனியா பொலிஸார் அதனை மீட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்

20 ஆம் பக்கம் பார்க்க....

## தியாக தீபம் திலீபனின் உடலைத் தேடும் படையினர்!

(யாழ்ப்பாணம்)

இந்திய அமைதிகாக்கும்படையை இலங்கையிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும் என்று கோரி கடந்த 1987 ஆம் ஆண்டு இவற்றைக்கு 27 வருடங்களுக்கு முன்னர் சாகும் வரை உண்ணா விரதமிருந்து உயிர் துறந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களில் ஒருவரான இராசையா பார்த்தீபன் என்ற இயற் பெயரைக்கொண்ட தியாகதீபம் திலீபனின் உடல் பழுதடையாத வகையில் மருந்துகள் போடப்பட்டு முல்லைத்தீவு வெள்ளமுள்ளி வாய்க்கால் பகுதியில் பாதுகாப்பாக புதைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலையடுத்து



20 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழ்ப்பாணம் மாநகரசபையில் மின்னியலாளர் வகுப்பு III பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பம் கோரல் - 2014

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013.01.01 ஆம் திகதி முதல் மாநகர சபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி பதவியணிகளில் உள்ள வெற்றிடங்களின் விபரங்களிற்கமைய, கௌரவ ஆளுநரினால் அனுமதிக்கப்பட்ட சேவைப்பிரமாணக் குறிப்பின் பிரகாரமும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 2013.02.08 ஆம் திகதிய NP/05/01/GE6/UNS/RQK இலக்க கடிதத்திற்கமைவாகவும், மின்னியலாளர் வகுப்பு III பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக குறிப்பிட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்**

1. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும்.
2. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள்,அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்
3. நியமனம் பெறுபவர்கள் 3 வருட தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் யாழ் மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித்திகதி 18.07.2014 அன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்களிற்கு உயர் வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.
3. நன்னடத்தை உடையவராகவும் தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. தொழில்நுட்பம் சார் சேவைகளிற்கு விண்ணப்பிப்பவர்கள் பதவி தொடர்பான ஆழ்ந்த அறிவும் மற்றும் செயன்முறை அனுபவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

கௌரவ ஆளுநரினால் அனுமதிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை குழுவினால் நேர்முகப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்டதற்கமைவாக கல்வித் தகைமை, தொழில் அனுபவம், வேலைமனப்பாங்கு என்பவற்றிற்கு புள்ளிகள இடப்பட்டு தெரிவுகள் மேற்கொள்ளப்படும். விண்ணப்பதாரி நேர்முகப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளிற்கமைந்து ஒழுகுதல் வேண்டும். மாநகரசபையில் பதிலீட்டுதொழிலாளியாக கடமையாற்றியவர்களிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

1. யாழ் மாநகரசபையின் நானாவித இறைவரிப் பகுதியில் ரூபா 250 ஐச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து உரிய விண்ணப்பபடிவத்தை பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பபடிவத்தை பூரணப்படுத்தி தகைமைகளிற்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் பதிவுத்தபால் மூலம் **"ஆணையாளர்,யாழ் மாநகரசபை, பருத்தித்துறை வீதி, நல்லூர்"** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

2. விண்ணப்பபடிவத்தில் உரியமுறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப் படாது இருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3. ஆட்சேர்ப்புதிட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமையற்றவரென தெரியவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தி வைக்கப்படும்.

**விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்பமுடிவுத்திகதி 18.07.2014 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பாக எமக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.அதற்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும.**

**கல்வித் தகைமை :**

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில இரு திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரேதடவையில் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவனத்தில் ஆறு மாதங்களிற்கு குறையாத மின்னியலாளர் பயிற்சி அல்லது மட்டம் II ல் மின்னியலாளர் (Electrician) தொழில்சார் கற்கைநெறி சான்றிதழ பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பளம் :**

01.01.2013 ஆம் திகதி முதல் ஆளுநரினால் அங்கீகரிக்கப்பட்ட சேவைப்பிரமாணகுறிப்பின்படி மாதாந்த சம்பளஅளவுத்திட்டம Rs. 12210 – 18x130 - 14550 (PL- 2-2006 A) ஆகும்.

2014.07.03
மாநகரசபை அலுவலகம்
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**ஆணையாளர்,**
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
(அ-7810)


## வீடு விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் 1 பரப்பு 15 1/2 குழி காணியில் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
0777111400
(6820)



## தேவை

யாழ் நகரை அண்மித்த பகுதிகளில் நல்லூர், கச்சேரி ஆகிய இடங்களில் அறை வாடகைக்கு தேவை.

தனி ஆண் ஒருவரின் பாவனைக்கு மட்டும்.

☎ தொடர்பு – 077 136 4555
6821


## மின்தடை

உயர் அழுத்த தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காகவும் புகையிரதப்பாதை வேலைகளுக்காகவும் நாளை சனிக் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை கட்டைக்காடு, வெற்றிலைக் கேணி, போக கறுப்பு, ஆழியவளை, உடுத்துறை, வத்திராயன், மருதங்கேணி, தாழையடி, மாமுனை, செம்பியன்பற்று, சுன்னாகம், கந்தரோடை, மல்லாகம், கல்லாரை, ஏழாலை, அளவெட்டி, தெல்லிப்பழை, பன்னாலை, சிறுவிளான், மாவிட்டபுரம், கொல்லன் கலட்டி, வித்தகபுரம், கீரிமலை, கூவில், வசந்தபுரம் பிரதேசத்திலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (செ)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் செம்மணி வீதி - A9 வீதி சந்திக்கு அருகில் அமைந்துள்ள சாளியப்பிட்டி நிலப்பரப்பில் 35 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0777145399



**மருந்தாளர் பாடநெறி**
**Pharmacy Course**
**(For External Pharmacise's Exam)**

After A/L

புதிய பிரிவுகள் ஆரம்பம்
ஆரம்பம் – 12.07.2014 – பி.ப 3.00
இடம் – 70, கச்சேரி நல்லூர் வீதி யாழ்ப்பாணம்.
பாட நெறிக்கட்டணம் – Rs.1500/–(மாதாந்தம்)
காலம் – 1 வருடம்
Medical Council இல் பதிவுகள் இலவசமாக செய்து தரப்படும்



தொடர்புகளுக்கு :
**076 668 8287**

அனுமதிக்கட்டணம் அறவிடப்பட மாட்டாது
6823



## யாழ் நகரில் கல்வி உலகில் புதியதோர் திருப்பம்

Rashmi
Show Kids' Future

**BOOK MART & Education care**

முற்று முழுதான காட்சிப்படுத்தலுடனான ஓர் புத்தகக் காட்சியறையின் உதயம்
இன்று (04.07.2014)
வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணி

**எமது காட்சிகள்**

- காகிதாதிகள்
- அப்பியாசக் கொப்பிகள்
- பயிற்சிப் புத்தகங்கள்
- அறிவுக் கதைகள்
- பாடசாலை மற்றும் அலுவலக உபகரணங்கள்

**எமது சேவை**

- மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்குகள் (Guidence Seminars to Exams)
- தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகள் (Career guidence Seminars)
- சுய மதிப்பீட்டுப் பரீட்சை வசதிகள் (Self examination facilities)
- மாதாந்த கல்வி கருத்தரங்குகள் (Monthly Education Seminars)

(அ-7808)

No. 925/1, Thaddatheru Junction, K.K.S Rd, Jaffna.
E mail: rbm.jaf@gmail.com Website: www.rbm.lk
T.P: 021 222 5151


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசு அனுமதி மறுத்தாலும் விசாரணை முன்னெடுத்துச் செல்லப்படும்

## இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் உறுதி

**ஐ.நா.விசாரணைக் குழுவின் அங்கத்தவர்கள் இந்த நாட்டிற்குள் பிரவேசிப்பதற்கு இலங்கை அரசு அனுமதி மறுத்தாலும் விசாரணையை முன்னெடுத்துச் செல்லமுடியும் என இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் ஜோன் ரன்கின் தெரிவித்துள்ளார்.**

ஆதாரங்களைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளை விசாரணைக் குழு தொடர்ச்சியாக முன்னெடுக்கும். விசாரணைக் குழுவிடம் தமது சாட்சியங்களை அளிப்பதற்கு யாரேனும் முன்வருவார்களேயானால் அவர்கள் எந்த விதத்திலும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படாதிருப்பது மிகவும் முக்கியமானது.

இல்லாவிட்டால், செப்டெம்பரில் மனிதவுரிமைகள் பேரவையில் இடம்பெறும் அமர்வின்போது வாய்மூல அறிக்கையும் அதனைத் தொடர்ந்து எதிர்வரும் மார்ச்சில் இடம்பெறும் அமர்வின்போது முழுமையான அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அடுத்து முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என இலங்கைக்கான பிரிட்டன் பிரதமர் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதுவர் இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில், ஐக்கிய நாடுகள் விசாரணைக்குழுவுடன் இலங்கை அரசு ஒத்துழைக்க மறுக்கும் நிலையில் அடுத்தகட்டமாக என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என ஊடகவியலாளர்கள் வினவியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பிரிட்டனில் கடந்த மாதம் இடம்பெற்ற "மோதல்களின் போது பாலியல்வன்முறைகளை முடிபுக்குக் கொண்டுவருதல்" தொடர்பான சர்வதேச மாநாடு குறித்து விளக்கமளிப்பதற்காகவே இந்த ஊடகவியலாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதன்போதே ஐ.நா.விசாரணைக் குழு தொடர்பான கேள்விகளுக்கும் பிரிட்டன் தூதுவர் பதிலளித்தார்.

பிரிட்டனில் நடைபெற்ற பாலியல் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வருதல் தொடர்பான சர்வதேச மாநாடு குறித்து கருத்து வெளியிட்ட பிரிட்டன் தூதுவர்,

மோதல்களின் போது பாலியல் ரீதியான வன்முறைகளை முடிபுக்குக் கொண்டு வருவது தொடர்பான பிரகடனத்தை இலங்கை அரசு அங்கீகரிகக வேண்டும் எனப் பிரிட்டன் தொடர்ந்தும் கோரிக்கை விடுத்து வருவதாகவும் இது தொடர்பில் அரசை ஊக்குவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

"மற்றைய நாடுகளில் உள்ளது போன்றே இலங்கையிலும் மோதல்களின் போது பாலியல்ரீதியான வன்முறைகளில் ஈடுபடும் தரப்பினர் தண்டனையிலிருந்து தப்பித்துச் சுதந்திரமாக நடமாடும் நிலைமை இல்லாமல் இருப்பது உறுதி செய்யப்பட வேண்டியது அவசியமாகும்.

பாலியல்வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்கள், ஆண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட அனைவருக்கும் ஆதரவும் பாதுகாப்பும் வழங்கப்படுவது அவசியமாகும்.

அரசியல் தஞ்சம் கோருவோர் தொடர்பில் பிரித்தானியா உறுதியான கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்றதெனக் குறிப்பிட்டதுடன், தமது சாட்சியங்களை சரிவர உறுதிப்படுத்தும் தனிநபர்களுக்கு சர்வதேச நியதிக்கு அமைவாக பிரிட்டன் அரசியல் தஞ்சம் வழங்குவதாகவும் அப்படி நிரூபிக்கத் தவறுபவர்களே மாற்று நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை அரசு மோதல்களின் போது பாலியல்வன்முறைகள் இடம்பெறுவதை முடிவுக்குக் கொண்டுவரும் பிரகடனத்தை அங்கீரிப்பதற்கும், ஐக்கிய நாடுகள் விசாரணைக்குழுவுடன் ஒத்துழை த்துச் செயற்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கும் என்பதில் பிரிட்டன் இன்னமும் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் அவர் இதன் போது தெரிவித்தார். (2)

## முகமாலையில் எலும்புக்கூடு மீட்பு

யாழ். முகமாலைப் பகுதியில் இருந்து நேற்று காலை மேலும் ஒரு எலும்புக் கூடு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது எலும்புக் கூடுகள், பொலித்தீன் பைகள், கைக் குண்டு, வெற்று ரவை நிரப்பி என்பன மீட்கப்பட்டுள்ளதாக பளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த எச்சங்களை பொலிஸார் பொறுப்பேற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நேற்றுமுன்தினம் இந்தப் பகுதியில் -சோதனைச் சாவடி இருந்த இடம் ஒன்றிலிருந்து பெண் விடுதலைப புலி உறுப்பினருடைய எலும்புக் கூடு மீட்கப்பட்ட நிலையில் நேற்று இரண்டாவது எலும்புக் கூடு மீட்கப்பட்டுள்ளது.

அப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடும் பணியாளர்களே இந்த எலும்புககூடுகளை மீட்டு, பளை பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இதனால், இப்பகுதியில் மேலும் எலும்புக்கூடுகள் இருக்கலாம் என சந்தேகித்து கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களுடன் இணைந்து, தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2)

# தென்னாபிரிக்க தூதுக்குழுவின் இலங்கை விஜயம் அரசிற்கு கிடைத்துள்ள இறுதி சந்தர்ப்பம்

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு கிடைத்துள்ள இறுதிச்சந்தர்ப்பமாகவே தென்னாபிரிக்க தூதுக்குழுவின் இலங்கை விஜயம் அமைந்துள்ளது.

இதனையும் அரசாங்கம் தவறவிடுமாயின் அதனால் சர்வதேசப் போர்க் குற்றவிசாரணையில் இருந்து மீள முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ்பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யானை தானே தன் தலையில் மண்ணை வாரிபோட்டுக் கொள்ளும் செயலை போலவே அரசாங்கத்தின் அண்மைய செயற்பாடுகள் அனைத்தும் அமைந்துள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைகளுக்கு நாம் இடம்கொடுக்கப் போவதில்லை என்று அரசாங்கம் தெரிவித்து வந்தாலும் விசாரணைகள் நிச்சயமாக நடை பெறும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அதிகாரத்தினை பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கம் நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில்,

ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக் குழு தனது விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ள இந்நிலையில் அதனை முடக்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

யுத்தம் முடிவுற்ற பின்னர் 5 வருட கால அவகாசத்தினை ஐ.நா. இலங்கைக்கு வழங்கியிருந்தது. இக் காலப் பகுதியில் இனங்களுக்கிடையே நல்லிணக்கம் மீள் குடியேற்றம் என்பனவற்றை செய்திருந்தால் மனிதவுரிமை மீறல்கள் போர் குற்ற விசாரணை என்பனவற்றிலிருந்து அரசு தப்பியிருக்கலாம்.

ஆனால், அரசாங்கம் எந்தவிதமான ஆரோக்கியமான செயற்பாடுகளையும் முன்னெடுக்கவில்லை. மாறாக நாட்டில் இனங்களுக்கிடையே வன்முறைகளை ஏற்படுத்தியே வருகின்றது. அண்மைக் காலத்தில் நாட்டில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக இடம்பெற்று வருகின்ற வன்முறைச் சம்பவங்கள் மேலும் அரசாங்கத்தை இறுக்கத் திற்குள்ளேயே சிக்கவைக்கும்.

தற்போது, ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரிலேயே தென்னாபிரிக்க பிரத்தியேகக் குழு இலங்கை வரவுள்ளது. ஆனால் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் அதனை எதிர்த்து போர்க்கொடி காட்டுகின்றன. இது முட்டாள் தனமான செயலாகும். இந்த சந்தர்ப்பத்தினை தவறவிடாது பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முனைய வேண்டும்.

இன்று நாடு மிகவும் பயங்கரமான அச்ச சூழ்நிலையை நோக்கிச் செல்கின்றது. தற்போது ஜனாதிபதித் தேர்தல் நடைபெற உள்ளதாக செய்திகள் வெளியாகி வருகின்ற நிலையில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் யார் என்று யாருக்கும் தெரியாமலுள்ளது. சிலவேளைகளில் இத்தேர்தலில் அரசாங்கம் தோல்வி கண்டால் கூட ஜனநாயக வழியை விட்டு இராணுவப் புரட்சியின் மூலம் ஆட்சியை கைப்பற்றும். அதற்கான இராணுவமயமாக்கல் செயற்பாடுகளே இப்போது நடைபெற்று வருகின்றன.

தற்போது நாடு இராணுவ மயமாகளுக்குள் முழுமையாக சென்று கொண்டிருக்கின்றது.

தலைமைத்துவப் பயிற்சி என்று பல்கலைக்கழக மாணவர்களும் மேஜர், லெப்டினன்ட் பதவிகள் மூலம் அதிபர்களும் இராணுவமயமாக்கலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். யாழ்ப்பாணத்தில் இளைஞர்களும் யுவதிகளும் பல வந்தமாக இராணுவத்தில் இணைக்கப்படுகின்றனர்.

முல்லைத்தீவிலுள்ள பெண் பிள்ளைகள் தாம் இராணுவத்தில் பலவந்தமாக இணைக்கப்படுகின்ற அச்ச சூழ்நிலை காரணமாக சொந்த வீடுகளை விட்டு வேறு இடங்களுக்குச் சென்று இடம்பெயர்ந்து வாழுகின்ற அவல நிலை காணப்படுகின்றது.

யுத்தத்தின் பின்னர் வட, கிழக்கில மிக பெரிய அளவில் சுமார் ஒன்றரை இலட்சம் இராணுவத்தினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அத்தோடு மக்கள் மீள்குடியேற்றம் இன்றும் முழுமை பெறவில்லை. ஜனநாயக ரீதியில் செயற்பட வேண்டிய மாகாண சபை முடக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அரசாங்கம் மிக மோசமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

மக்களுக்கு அரசாங்கம் மீதான நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் இலங்கை அரசாங்கத்திற்குக் கிடைத்துள்ள இறுதிச் சந்தர்ப்பமாக தென்னாபிரிக்க தூது குழுவினரின் வருகை அமைந்துள்ளது. இதனையும் அரசாங்கம் பயன்படுத்த தவறினால் யாராலும் அரசாங்கத்தினை காப்பாற்ற முடியாது. எனவே, மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படும் வகையில் மாற்றத்தை ஏற்படுத்த அரசாங்கம் முனைய வேண்டும் என்றார். (2)

## இராசி பலன்

**04.07.2014**

(ஆனி 20, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
சப்தமி பின்னிரவு 1.24 மணிவரை
உத்தரம் முன்னிரவு 8.40 மணிவரை
இராகுகாலம் 10.27-11.57 மணிவரை
சுபநேரம் 5.57-7.27 மணிவரை
சித்தாமிர்தம்

வளவன்

**மேடம்:** மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், ஆறுமுகப் பெருமான் வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**இடபம்:** தொழில் முயற்சியில் மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், கனவுகள் நனவாக கணபதியை வழிபட வேண்டிய நாள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுபகாரிய செலவுகள் அதிகரிக்கும்.

**கடகம்:** வீட்டுத்தேவைகளை பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், உடன்பிறப்புக்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**சிம்மம்:** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.

**கன்னி:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும், விரும்பிய உணவுப் பொருட்களை சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள்.

**துலாம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், சஞ்சலங்கள் கூடும்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, வெளியூர்த் தொடர்புகளால் நன்மையுண்டு, காரிய சித்தியுண்டு.

**தனுசு:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படுவர், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**மகரம்:** வழிபாட்டில் கவனம் செலுத்துவீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், தேவையற்ற அச்சங்கள் ஏற்படலாம், திடீர் பயணங்கள் கைகூடும்.

**கும்பம்:** நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், குடும்பப் பொறுப்புக்கள் கூடும், பிரயாண பயமுண்டு, மருத்துவச் செலவுகள் கூடும், போசன சுகமுண்டு.

**மீனம்:** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும், சொந்த பந்தங்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவருக்கும் ஆங்கிலம்; ஆங்கில பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியின் மகிந்த சிந்தனை செயற்றிட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் அனைவருக்கும் ஆங்கிலம் என்ற இலவச ஆங்கில பயிற்சி நெறி எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவு ள்ளதாக யாழ்ப்பாண வலய கல்விப்பணிப்பாளர் எஸ்.




உதயகுமார் அறிவித்துள்ளார்.

இலங்கை கல்வி அமைச்சின் பாடத் திட்டத்திற்கமைய 120 மணி த்தியாலங்களைக் கொண்ட இப் பயிற்சி நெறியானது பிராந்திய ஆங்கில ஆதார நிலையம் யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம். (RESC,Jaffna) எனும் முகவரியில் நடபெறும்.

எனவே ஆர்வமுடையோரும் பாடசாலை விட்டு விலகியோரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னதாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி பணிமனை யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (2)




# அற்பசொற்ப அதிகாரங்களுடனேயே செயற்பட்டு வருகின்றோம்-கஜதீபன்

தமிழ்ச் சமூகத்தில் திட்டமிடப்பட்டு உள்நுழைக்கப்பட்டிருக்கும் பல்வேறு வகையிலான களைகளை நாம் இனங்கண்டு அகற்ற வேண்டியிருக்கின்றது. இப்படியான களைகள் ஒவ்வொன்றும் எமது மக்களுக்கு ஒவ்வொரு வகையிலான பாதிப்புக்களை எமக்கு ஏற்படுத்திய வண்ணமே இருக்கின்றன.

அப்படி வேரோடும் வேரடி மண்ணோடும் களையப்படவேண்டிய பலவற்றில் இயற்கையான களைகளில் ஒன்றான பார்த்தீனியம் எனும் நச்சுச்செடியையும் நாம் நோக்க வேண்டும் என வடக்கு மாகாணசபையயின் ஆளும்கட்சி உறுப்பினர் பா.கஜதீபன தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் பார்த்தீனியம் செடி ஒழிப்பில்முன்னிலை பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை சிறுப்பிட்டி ஜனசக்தி சனசமூக நிலையத்தில் வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஹால்தீன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்வேறு வகையான கிண்டல் பேச்சுக்கள், நாகரிகமற்றவர்களின் விமர்சனங்கள் என்பவற்றினையும் தாங்கி அவற்றையெல்லாம் தாண்டி வடமாகாணம் முழுவதும் கிட்டத்தட்ட 38 ஆயிரம் கிலோ கிராம் பார்த்தீனிய விஷச்செடியை இல்லாமற்செய்த ஒரு திருப்தியோடு இன்றைய நிகழ்வில் கலந்து கொணடிருக்கின்றார் எமது வடமாகாண விவசாய அமைச்சர் சூழலியலாளர் ஐங்கரநேசன்.

சிலநேரங்களில் அவர்மீதான பார்த்தீனியம் செடி ஒழிப்பு தொடர்பான விமர்சனத்தை மிகவும் கவலையோடு என்னிடம் பகிர்ந்து கொண்ட போது அவருக்கு நான் சொன்னேன் "எமக்கு எதிராகவும் எமதுமக்களுக்கு எதிராகவும் செயற்பட்டுவருபவர்கள் எம்மைப் புகழ்ந்தாலோ அல்லது அவர்கள் எம்மை விமர்சிககாமல் இருந்தாலோ தான் நாம் தவறாக இருக்கின்றோம் அல்லது சரியான முறையில் செயற்படவில்லை என்று அர்த்தமாகும்.

எனவே, எம்மை எதிர்ப்பவர்களால் நாம் விமர்சிக்கப்படுகின்ற போது நாம் எமது பாதையில் சரியாகப்பயணிக்கின்றோம் என்பது தானே அர்த்தம். எனவே நாம் வ்ணர்களின் வெட்டிப் பேச்சுகளைப் புறந்தள்ளி துணிச்சலுடன் செயற்படுவோம்"

எனவே தான் எம்மிடமிருக்கும் மிகவும் அற்ப சொற்ப அதிகாரங்களை வைத்தே பலரது தடைகளையும் தாண்டி நாம் இவ்வளவிற்கு முயன்று பார்க்கின்றோம். முழு அதிகாரங்களையும் எமக்கு வழங்குவர்களாயின் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்களுக்கு சிறந்ததொரு சேவையை வழங்க முடியுமாக இருக்கும்.

கடந்த மாதம் கூட அரச தரப்பினர் "நீங்கள் மாகாண சபையைக் கைப்பற்றி 7 மாதங்க ளாகி விட்டன இக்காலப்பகுதிக்குள் பல்வேறு வகையான நியதிச் சட்டங்களை உருவாக்கிச் செயற்பட்டிருக்க வேண்டும் என்றார்கள். அதைவிட நேரடியாகவே" முடியாவிட்டால் சொல்லுங்கள் நாங்கள் உருவாக்குகின்றோம்" எனவும் சொன்னார்கள். ஆனால் நாம் சாதாரணமாக உருவாக்கிக்கொடுத்த எந்தச் சட்டச்சிக்கல்களும் இல்லாத நியதிச்சட்டங்களுக்கான அனுமதிகூட அரச தரப்பால் இன்னும் வழங்கப்படவில்லை என்பதைக்கூட அவர்கள் அறியாமல் உள்ளனர். அது தொடர்பான கோப்புகள் ஆளுநரிடம் உள்ளன. இதுதான் இன்றைய உண்மை நிலைமை. இதை எமது மக்கள் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். இது தொடர்பான விழிப்புணர்வையும் எமது மக்கள் மத்தியில் மேற் கொள்ள உள்ளோம்.

ஆக சாதாரண நியதிச்சட்டங்களுக்கான அனுமதியைக் கூடபெறுவதில் தடங்கலான நிலைமையிலேயே இவ்வாறான செயற்பாடுகளை நாம் மிகவும் கஷ்டப்பட்டு முன்னெடுக்க வேண்டியுள்ளது. போர் அழித்த எமது தாயக வளங்களை இன்று போர் ஓய்ந்த பின் இயற்கையிடமிருந்து கூட பாதுகாக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (அ-2-6)

## மஹோற்சவ கால தெய்வீகப்பேருரைகள்

நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில் மஹோற்சவ கால தொடர் தெய்வீகப் பேருரைகளும் கலை நிகழ்வுகளும் தினமும் இரவு 8 மணி தொடக்கம் 9 மணிவரை நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய, இன்று வெள்ளிக் கிழமை சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கத்தின் பேருரையும் நாளை சனிக் கிழமை யாழ். யூனியன் கல்லூரி மாணவர்களின் இசை ஆராதனையும் மறு நாள் ஞாயிற்றுக்கிழமை மதுரகவி காரை எம்.பி.அருளானந்தனின் பேருரையும் இடம் பெறும். (2)

## கலந்துரையாடல்

கரவெட்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த கலை இலக்கியவாதிகள் மற்றும் பண்பாட்டுதுறைசார் வல்லுநர்கள் முதலானோருக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவசிறி அறிவித்துள்ளார்.

மேற்படி கலந்துரையாடலில் பங்குபற்றி எதிர்காலத்திட்டங்கள், சமகாலத் தேவைகள் முதலான பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைத்து பிரதேச பண்பாட்டு மேம்பாட்டுத்திட்டங்களை சிறப்பாக முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு அவர் கேட்டுள்ளார். (2-60)

# முஸ்லிம் வியாபாரிகளின் விபரங்கள் இராணுவத்தினரால் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரிலுள்ள முஸ்லிம் வியாபாரிகளின் விபரங்களை இராணுவத்தினர் திரட்டி வருவதாக முஸ்லிம் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

நேற்றும் நேற்று முன்தினம் இரவும் யாழ்.நகரிலுள்ள வியாபார நிலையங்களிற்கு நேரடியாக சென்ற படையினர் அவர்களின் விபரங்களை திரட்டியுள்ளனர்.

அளுத்கம வன்முறைக்கு பின்னரான படையினரின் இத்திடீர் நடவடிக்கையின்ால் முஸ்லிம் வியாபாரிகள் அச்சமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

இராணுவ மற்றும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் என தம்மை அடையாளப்படுத்திய ஒரு சில நபர்கள் யாழ்.நகரிலுள்ள முஸ்லிம் வியாபாரிகளின் வியாபார நிலையங்களிற்கு நேரில் சென்ற இவர்கள் முஸ்லிம் வியாபார நிலையங்களின் நடத்துனர்களின் பெயர் விபரங்கள், வியாபார நிலையங்களின் சொத்து மதிப்பீடுகள் வதிவிட முகவரி என்பவற்றினைய்ும் பெற்றுச் சென்றுள்ளனர்.

இவ்வாறு விபரங்களை திரட்டியவர்களிடம் எதற்காக விபரங்களை திரட்டுகின்றீர்கள் என வியாபார உரிமையாளர்கள் சிலர் கேட்டுள்ளனர்.

இதன்போது அவர்கள் எம்மை இராணுவ, பொலிஸ் புலனாய்வு பிரிவினர் என கூறிக்கொண்டு அடையாள அட்டையொன்றினையும் எடுத்துக் காண்பித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் யாழில் உள்ள முஸ்லிம்கள் அச்சமடைந்துள்ளனர்.

அளுத்கம முஸ்லிம் மக்களிற்கு எதிராக இடம்பெற்ற வன்முறையில் முஸ்லிம்களின் பலகோடி ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் சேதம் விளைவிக்கப்பட்டதோடு எரித்து நாசமாக்கப்பட்டுள்ளன.

இச் சம்பவத்தில் அதிர்வலைகள் தணிவதற்கு முன்னர் யாழ்.நகரிலுள்ள முஸ்லிம் வியாபாரிகளின் விபரங்கள் திரட்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2-4)

## தேர்ச்சில்லினுள் அகப்பட்ட வயோதிபரின் கால் முறிந்தது

(தும்பளை)

தேர்ச்சில்லினுள் அகப்பட்ட வயோதிபர் கால் முறிந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை புலோலி பசுபதீஸ்வர சிவனாலயத்தில் நேற்று இடம் பெற்ற தேர்த்திருவிழாவின் போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் புற்றளையினைச் சேர்ந்த இராமசாமி (வ்யது 70) என்பவரே இவ்வாறு கால் முறிவுக்கு உள்ளானவர் ஆவார்.

குறித்த வயோதிபர் தேர் வடத்தினை பிடித்து இழுத்தபோது தடுக்கி கீழே விழுந்துள்ளார்.

இதனையடுத்து அவரது கால் தேர்ச்சில்லினுள் அகப்பட்டதால் கால் முறிந்தநிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (அ-2-19)


## பேராசிரியர் சிவத்தம்பி நினைவுக் கருத்தாடல்

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் சிவத்தம்பி நினைவுக் கருத்தாடல் நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்.பிரதான வீதி மறைக்கல்வி நிலையத்தில் இடம்பெறும்.

நிகழ்வின் அறிமுக உரையினை அரசியல் ஆய்வாளர் சி.அ.யோதிலிங்கம் வழங்கவுள்ளதுடன் நினைவுக் கருத்தாடலை யாழ்.பல்கலைக்கழக சமூகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன், யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம் மற்றும் சமூக ஆய்வாளர் தெ.மதுசூதனன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

எனவே ஆர்வமுள்ள அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சமூக விஞ்ஞான ஆய்வு மன்றம்அறிவித்துள்ளது. (2)



மல்லாகம் சாளம்பை முருகன் ஆலயத்தின் இராஜகோபுர கும்பாபிஷேகம் அண்மையில் இடம்பெற்ற போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துங்கள்

## முஸ்லிம் பேரவை ஜனாதிபதியிடம் வலியுறுத்து!

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துமாறு இலங்கை முஸ்லிம் பேரவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை வலியுறுத்தியுள்ளது.

ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ள இலங்கை முஸ்லிம் பேரவை, மத சகிப்புத்தன்மை மற்றும் இன வெறுப்பை தூண்டும் பிரச்சினைகளை உடனடியாக முடிவுக்கு கொண்டு வரும் வகையிலும் அனைத்து சமூகங்களின் குறைகள்ள தீர்க்கும் வகையிலும் பயனுள்ள வழிமுறை உருவாக்கப்பட வேண்டும் எனவும் அதில் கோரப்பட்டுள்ளது.

இந்த இலக்கை நோக்கிச் செல்லும் வகையில். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் 9.218 மற்றும் 219 பரிந்துரைகளை அமுல்படுத்துவதில் ஜனாதிபதியின் உரிய தலையீடுகளை கோருவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தலைமையில் நாட்டில் நடைபெற்ற போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர், நாடு அனைத்து துறைகளிலும் முன்னேற்றமடைந்து வரும் நிலையில், அளுத்கம, பேருவளை மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் இரண்டு நாட்கள் இடம்பெற்ற வன்முறைகள் நாட்டின் முன்னேற்றத்தை பலவீனப்படுத்தியுள்ளது எனவும் முஸ்லிம் பேரவை சுட்டிக் காட்டியுள்ளது. இந்த வன்முறைகளை சர்வதேச சமூகம் கண்டித்ததன் மூலம் இலங்கையின் தோற்றத்தை இருண்ட நிழல் மூடிக் கொண்டது. முஸ்லிம் மற்றும் இதர சிறுபான்மை இனங்களுக்கு எதிராக பொதுபல சேனா அமைப்பு கடந்த இரண்டு வருடங்களாக முன்னெடுத்து வரும் பின்னணியில் இடம்பெற்ற இந்த வன்முறைகளை இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பும் கண்டித்துள்ளது.

இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு மற்றும் ஏனைய முஸ்லிம் நாடுகள் இலங்கையின் மிகப் பெரிய நட்பு நாடுகள் என்பதுடன் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது இலங்கைக்கு ஆதரவு வழங்கின எனவும் இலங்கை முஸ்லிம் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

# பாலியல் துஷ்பிரயோக எதிர்ப்பு பிரகடனத்தில் இலங்கை கைச்சாத்திட வேண்டும்

வன்முறைச் சம்பவங்களின் போது பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபடு வதை எதிர்க்கும் பிரகடனத்தில் இலங்கை அரசாங்கம் கட்டாயம் கைச்சாத்திட வேண்டும் என இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரான்கீன் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக பெரும்பான்மையான உலக நாடுகள் யுத்தத்தின் போது பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுவதை எதிர்த்து வருகின்றன.

எனினும் இலங்கை இதுவரை யுத்த வலயத்தில் பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுவதை எதிர்க்கும் பிரகடனத்தில் கைச்சாத்திடவில்லை. எனவே இலங்கை இப்பிரகடனத்தில் கட்டாயம் கைச்சாத்திட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு என அவர் தெரிவித்தார். (அ-2)

# தீர்வுத் திட்டத்தை எட்டுவதற்கு அரசியல் விருப்பம் கேள்வியாகவுள்ளது

## பொதுநலவாய நாடுகள் விவகார சிரேஷ்ட அமைச்சர்

(கொழும்பு)

இலங்கையில் யுத்தக் குற்றச் செயல்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைமை தோல்வியடைந்துள்ளதாக பிரித்தானிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

உரிய தரத்தில் இலங்கையில் விசாரணைகள் நடத்தப்படவில்லை என பிரபுக்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை விவகாரம் தொடர்பில் தொடர்ந்தும் கவனம செலுத்தப்பட்டு வருவதாக பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய நாடுகள் விவகார சிரேஷ்ட அமைச்சர் பார்னொஸ் வார்சீ தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகள் முழு அளவில் அமுல்படுத்தப்படவில்லை எனவும், பகுதியளவிலேயே அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். யுத்தத்தின் போது இரண்டு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டதாக குற்றம் சுமத்தப்படும் மனிதவுரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சுயாதீன பக்கச்சார்பற்ற விசாரணைகளை இலங்கை அரசாங்கம் நடத்தத் தவறியுள்ளது என்ற ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.

தீர்வுத் திட்டமொன்றை எட்டுவதற்கான அரசியல் விருப்பம் தொடர்ந்தும் கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார். 2009 ஆம் ஆண்டிலிருந்து பிரித்தானியா உள்ளிட்ட பல நாடுகள் சர்வதேச சுயாதீன விசாரணைகளை வலியுறுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார். (அ-2)




புங்குடுதீவு மேற்கு, இறுப்பிட்டி பட்டையகாரன் வளவு
அருள்மிகு ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலய பஞ்ச குண்டபக்ஷ
புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்-2014

மஹா கும்பாபிஷேகம் 07.07.2014 புதன் கிழமை காலை 8.57- 09.57 மணிவரை

எண்ணெய்க் காப்பு:- 08.07.2014 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00-5.00 மணிவரை

பரிபாலன சபை, திருப்பணிச்சபை.

(6804)



உங்கள் ஆலய திருவிழாக்களில்...

அகில உலகப் புகழ் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரை அழைத்து மகிழ விரும்புகிறீர்களா? (30.07.2014 வரை)



தொடர்பு:- வில்லிசைச் சக்கரவர்த்தி கலைமாமணி, டாக்டர்.எஸ். எஸ். சர்மா.(குருஜி) சங்கானை, முருகமூர்த்தி கோவிலடி.

TP:0777064247

(6994)



கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 2
கி.பா: 55 சூரி செவ் 6 இல்
உயரம்: 5’6"
தகைமை/தொழில்: பட்டதாரி/ஆசிரியர், சொந்த வாகனம்
தொ.இ:B/3309

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 2
கி.பா: 65.5 செவ் 4 இல்
உயரம்: 5’7"
தகைமை/தொழில்: A/L, CIMA - Intermediate level / Safety Supervisor (USA – Citizen)
தொ.இ: B/3310

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பரணி 1
கி.பா: 14 சூரி செவ் 9 இல்
உயரம்: 6’
தகைமை/தொழில்: A/L போட்டோ, வீடியோ படப்பிடிப்பாளர், மோட்டார்வாகன மெக்கானிக
தொ.இ: B/3311

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 3
கி.பா: 55.25
உயரம்: 6’
தகைமை/தொழில்: A/L, HNDA / முகாமைத்துவ உதவியாளர்
தொ.இ: B/3313

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: விசாகம் 4
கி.பா: 4.75
உயரம்: 5’2"
தகைமை/தொழில்: BA, Dip in Management, Computerized accounting / Liaison officer எதிர்பார்ப்பு பெண் விவாகரத்தானவர்
தொ.இ: G/3312

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 3
கி.பா: 32 செவ் 8 இல்
தகைமை/தொழில்: A/L, CBF / வங்கியாளர்
தொ.இ: G/3314

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: சித்திரை 3
கி.பா: 47 செவ் 7 இல்
உயரம்: 5’4"
தகைமை/தொழில்: BSc, MSc, Charted / பொறியியலாளர்
தொ.இ: G/3322

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 1
கி.பா: 65
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/3323

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வாழ்வாதாரத்தை பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பேன்

## ஒருங்கிணைப்பாளர் குகேந்திரன் உறுதியளிப்பு



வாழ்வியலை இழந்து தவிக்கும் மககளது வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் நோக்குடன்எத்தனையோ பல அபிவிருத்தித் திட்டங்களை நாம் பெற்றுக கொடுத்தும் வாழ்வாதாரம் குறைந்த பகுதியாக இப்பகுதி இருப்பதைக் கண்டு மனம்வேதனை அடைகிறது.

நிச்சயமாக உங்களுக்கான வாழ்வாதார உதவிகள் அனைத்தையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பேன் என அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் தெரிவித்தார்.

அரியாலை கிழக்கு பெரிய தோட்டத்தில் வாழும் 28 குடும்பங்களின் வாழ்வாதார பிரச்சினைகள் தொடர்பாக அப்பகுதி மக்களால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் தற்போது இரண்டு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். ஒன்று அபிவிருத்தி சார்ந்தது. மற்றையது அரசியல் ரீதியான பிரச்சினை. தமிழ் மக்களின் அபிவிருத்தியை யார் தடுத்தாலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அரசுடன் போராடி அனைத்து உதவிகளையும் பெற்றுக கொடுத்துக் கொண்டிருக்கின்றார்.

ஆனால் உங்களால் அரசியல் பலத்தை பெற்றவர்கள் இன்று உங்களை திரும்பிப் பார்க்காதிருப்பதை காணும்போது வேதனையாகவுள்ளது.

1977 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்க் கட்சிகள் அரசியல் ரீதியாக போடும் கோசங்களூடாக அழிவை மட்டும்தான் நாங்கள் பெற்றுக்கொண்டுள்ளோம். வெறும் கோசங்கள் வாழ்வியலுக்கு எதனையும் பெற்றுத்தரப் போவதில்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மாகாண சபைக்கு நிதியை பெற்றுக் கொள்ளக்கூடிய சட்டங்களைக் கூட உருவாக்காத இந்த மாகாணசபை எப்படி உங்களுக்கான வாழ்வாதார உறுதி மொழிகளை நிறைவேற்றித் தருவார்கள்.

மக்களின் சுதந்திரமான பேச்சுக்களின் ஊடாகத்தான் நாங்கள் அரசியல் நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றோம். எமது அரசியல் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பேசவேண்டிய அரசுடன் முரண்பட்டுக் கொண்டிருப்பதால் எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை.

எமது மாகாணத்தைப் பொறுத்தவரை ஒட்டுமொத்த அரசியல் பலமும் மாகாண சபை ஆட்சியாளரிடமே இருக்கிறது. அந்த மாகாண சபையை கபடப் பேச்சின் மூலம் கைப்பற்றியவர்கள் தற்போது மௌனமாக இருக்கின்றனர். இதை தட்டிக்கேட்காது இருப்பது மக்களாகிய உங்களது தவறாகும்.

யுத்தத்தில் இறந்த அனைத்து உயிர்களும் எமது தமிழ் மக்களினதும் போராளிகளினதும்தான். தற்போது சர்வதேச விசாரணை ஒருபுறம் நடக்கவுள்ளது.

இந்த விசாரணை என்பது தமிழர்களுக்கான நிரந்தர தீர்வுக்கு எந்த வகையிலும் பயனுள்ளதாக இருக்கப் போவதில்லை என்பதையும் தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்றார். (அ)

# மாடு வெட்டிய நபருக்கு பிணை

கரணவாய் தெற்கு பிரதேசத்தில் மாடுவெட்டிய குற்றத்தை ஒப்புக்கொண்ட இளைஞன் 25 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த இளைஞன் நேற்று முன்தினம் இறைச்சிக்காக மாடு வெட்டிய விவகாரம் நெல்லியடி பொலிஸாருக்கு தெரியவரவே சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் இளைஞனை கைது செய்ததுடன் இறைச்சியினையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து அன்றைய தினமே பருத்தித்துறை நீதிமன்றத்தில் இளைஞனை ஆஜர்படுத்திய போது அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் ஆட்பிணையில் செல்ல நீதவான் அனுமதித்ததுடன் எதிர்வரும் 22 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகும் படி நீதவான் உத்தரவிட்டார்.

அத்துடன் மாட்டு இறைச்சியினை அழிக்குமாறு நெல்லியடி பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டார். (2-60)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 70 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 650 | 650 | 500 | 600 |
| தக்காளி | 200 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 | 60 |
| கோவா | 160 | 140 | 150 | 150 |
| கரட் | 200 | 180 | 200 | 200 |
| பூசணி | 60 | 60 | 70 | 80 |
| புடோல் | 60 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 60-120 | 80 | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 | 90 |
| பாகற்காய் | 200 | 220 | 230 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 140 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 100 |
| பயற்றங்காய் | 200 | 180 | 170 | 120 |
| லீக்ஸ் | 80 | 100 | 80 | 100 |
| பீற்றூட் | 80 | 120 | 120 | 120 |
| கறிமிளகாய் | 250 | 140 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 110-150 | 200 | 250 | 200 |
| போஞ்சி | 160 | 150 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 80 | 60 | 100 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 60-80 | 120 | 90 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 10-40 | 30 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 100 | 120 | 120 | 100 |


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 64

சரண் திலக்

குழந்தை வளர்ப்பில் எச்சரிக்கையாக இருக்க வேண்டியவை

அவமானப்படுத்தப்படும் குழந்தை
**குற்றவாளி ஆகின்றது**
கேலி செய்யப்படும் குழந்தை
**வெட்கத்தோடு வளர்கிறது**
குறை கூறி வளர்க்கப்படும் குழந்தை
**வெறுக்கக் கற்றுக்கொள்கிறது**
அடக்கி வளர்க்கப்படும் குழந்தை
**சண்டையிடக் கற்றுக்கொள்கிறது**

சுபாகீதன் சத்தியமூர்த்தி




கரோலின் ஜெனி

பல் டாக்டரை பார்க்கப் போனேன் அங்கே லேடி டாக்டர் இருந்தாங்க திரும்பி வந்துட்டேன்




ஏன் என்றால் நாம் எந்த பொண்ணுக்கிட்டயும் பல்லைக் காட்டி நிற்கக் கூடாது பாருங்க


தனுசியா தனு




சிந்து ஜோன்



சச்சி சங்கீத்





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் இந்து போட் இராசரத்தினம் ஐயா

## பெரியார் இராசரத்தினத்தின் 130 ஆவது பிறந்ததினம் இன்றாகும்



இந்து போட் இராசரத்தினம்

காலஞ்சென்ற இந்துபோட் இராசத்தினம் அவர்கள் ஆதரவற்ற தமிழ்ச் சிறாருக்கு இருப்பிட வசதியுடன் கல்வி வாய்ப்பும் வழங்கி உயர் வழி காட்டிய பெருமகனார் என்றால் மிகையாகாது. அவரின் பணிபற்றி எனது நினைவிலிருந்து 1955 காலப்பகுதியில் எனது தந்தையார் காலமாகினார். எனது பெற்றோருக்கும் சகோதரருக்கும் ஆதரவளிக்க யாருமற்ற வேளையில் இந்து போட் நிறுவனத்தின் சேவைகளை அறிந்து தாயார் உரிய ஆவணங்களைச் சேகரித்து இராசத்தினம் ஐயாவைச் சந்தித்து எனது மூத்த சகோதரியை திருநெல்வேலியில் உள்ள முத்துத்தம்பி வித்தியாலயத்தில் முதலில் சேர்த்தார். கல்வியங்காடு சைவ வித்தியாலயத்தில் கற்றுக் கொண்டிருந்த நான் அடுத்த ஆண்டு சித்தியடைந்து உயர் கல்விக்காக வேறு பாடசாலையில் சேரவேண்டிய நிலையில் இருந்தேன். எனது தாயார் முத்துத்தம்பி வித்தியாலயத்தின் சேவைகளை எடுத்துக் கூறி உடனேபோய் இராசத்தினம் ஐயாவைச் சந்திக்கும் படி எனக்கு கூறினார்.

அதன் பிரகாரம் பச்சை நிற மொறிஸ் மைனர்காரில் ஒரு வயோதிபர் வந்து இறங்கினார். பச்சை நிற கோட்டும் வேட்டியும் அணிந்திருந்த பிரமுகர் இராசத்தினம் ஐயா அவர்களே வந்தவர். என்னைக்கண்டு என்ன விடயம் என்று கேட்டார். எனது முதுகில் தட்டி முன்னாள் உள்ள பாடசாலை அதிபரின் காரியாலத்தைக் காட்டி அங்கு போய் அதிபர் அவர்களை சந்தித்து தான் சொன்னதாக கூறவும் என்று எனக்கு கூறி அனுப்பி வைத்தார்.

இராசத்தினம் ஐயா அவர்கள் தனது பிள்ளைகள் போலவே விடுதியில் உள்ள பிள்ளைகளையும் பாதுகாத்தார், பராமரித்தார், வளர்த்தார், கல்வி ஊட்டினார் என்றே கூறலாம்.

கனிவான பேச்சு, கண்டிப்பான குணம் , கண்ணியமான நடத்தை, சிறுவர்களின் தேவை விருப்பு அறிந்து அவற்றை நிறைவு செய்வதில் தாய் தந்தை போன்றே செயற்பட்டார்.

விடுதிக்கு நாளாந்தம் கொள்வனவு செய்யப்படும் காய்கறிகளையும் காலைவேளையில் வந்து பார்வையிடுவதும் அவற்றின் தரம் பற்றி பரிசோதிப்பதும் அவரின் பணியாகும்.

மாணவருடன் கலந்துரையாடி சாப்பாட்டின் தரம், அளவு பற்றியும் தகவல்களை சேகரித்து அவற்றை சிறப் பாக செய்ய ஏற்பாடு செய்வார். தீபாவளி, பொங்கல் பண்டிகைகாலங்களில் மாணவர்களுக்கு விசேட உடைகள், உணவு ஏற்பாடுகள் செய்து உதவுவார்.

பண்டிகை வேளையில் தானும் வந்து பங்கேற்று சிறுவர்களை மகிழ்வித்து ஊக்குவிப்பார். குழப்படியான மாணவர்களுக்கு ஆலோசனைகள் கூறி வழிப்படுத்துவார்.

சிறுவர்கள் விடுதியில் தொற்று நோய்க்குள்ளாகி உள்ளனர் என்று அறிந்தால் உடனேயே விடுதிக்கு போய் நிலைமையை ஆராய்ந்து காரணிகளை நிரற்படுத்தி சுற்றாடல் பிரச்சினை எனில் அவற்றை சீர்படுத்த விடுதிப் பொறுப்பாளரை வழிப்படுத்துவார்.

தொற்று நோய்க்கான மருந்துகளை பெற வைத்திய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு ஏற்பாடுகள் செய்வார்.

விடுதி படுக்கைகளை சுத்தம் செய்யும் மருந்து வசதிகளை ஏற்பாடு செய்வதோடு காலத்திற்கு காலம் சுகாதார ஏற்பாடுகளை செய்யவும் ஏற்பாடு செய்வார்.

சிரங்கு, சொறி போன்ற சருமநோய்கள் உள்ளவர்களுக்கு வைத்திய சேவையும் பெற்று தருவதோடு தொற்று நீக்கி சவர்க்காரமும் தந்து சுகநலமாக வாழ வழிகாட்டிய் பெருந்தகை காலத்துக்கு காலம் சிறுவர்களுக்கு பேதி வழங்கவும் வழி நடத்துவார்.

தவணை விடுமுறையிலும் மாணவர் விடுதியில் தங்கியிருப்பவர்களுக்கும் வசதிகள் உரிய அளவில் கிடைக்க ஆவனசெய்வார்.

தவணை ஆரம்பத்தில் பாடசாலை உபகரணங்களான கொப்பி , புத்தகங்கள், பென்சில்கள் கிடைக்க ஏற்பாடு செய்வார். தவணை முறையில் தவணைபரீட்சை முடிவுகள் பொதுதேர்வு முடிவுகளை கொண்டு மாணவர்களை பாராட்டி, ஊக்குவிப்பதும் வழிப்படுத்துவதும் அவரது பண்பாகும்.

கிடைக்கக்கூடிய ஆசிரிய வளத்தை கொண்டு கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்தவர். ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை இருந்ததே தவிர ஏனைய பாடங்களுக்கு எல்லா ஆசிரிய சேவையையும் பெறக்கூடிய வகையில் பாடசாலைஅதிபரும் இராசத் தினம் ஐயா அவர்களும் கற்பித்தல் ஏற்பாடுகளை செய்தனர். திருநெல் வேலி பிரதேசத்திலேயே ஆயிரத்துக்கு அதிகமாணவர்களை கொண்டிருந்தாலும் சிறந்த பெறுபேற்றை கொண்டதாக இருந்தது. முத்துத்தம்பி வித்தியாலயம் பரமேஸ்வரா கல்லூரிக்கு அடுத்த தரமான பாடசாலையாக இருந்தது. இல்ல விளையாட்டு போட்டிகள், கட்டுரைப் போட்டிகள், மொழித் தேர்ச்சி கூட்டங்கள், போட்டிகள் என்பவற்றை நடத்தி மாணவர்களை ஊக்கப்படுத்தினார்.

காலத்துக்காலம் மூத்த அறிஞர்களை கொண்டு வெள்ளிக்கி ழமை, தினங்களில், சரஸ்வதி பூசை தினங்களில், நல்வழி அறிவுரை சொல்லக்கூடிய சொற்பொழிவுகளை ஆற்றச்செய்வார். இக்காலத்தில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் ஆற்றிய பிரசங்கங்கள் மறக்கவொண்ணாதவை. இங்கு கற்ற மாணவர்கள் சமூகத்தில் உயர் ந்த பண்புகளுடனும் உயர் பதவிகளுடனும் வாழ்வதும் உதாரணம். என்னுடன் கற்ற மாணவர்களை நான் சந்தித்த போது அவர்கள் கிராம அலுவலராகவும் எழுது வினைஞராகவும் ஆசிரியராகவும் கல்வியாளர்களாகவும் வைத்தி யர்கள் ஆகவும் பொறியியல் வல்லுநர் ஆகவும் பஸ் நடத்து நராகவும் தொழில்களில் உயர்ந்து நிற்பது மட்டுமல்ல பண்பாட்டு ரீதியாகவும் சிறந்து வாழச் செய்தவர் இராசரத்தினம் ஐயா என்றால் மிகையாகாது. வாழ்க அவர் பெயர் புகழ் அவர் பணி செய்வோம். பின்பற்றி நடப்போம்.

*ச. சுப்பிரமணியம்*
*இளைப்பாறிய மேலதிக*
*மாகாண கல்விப்பணிப்*
*பாளர் வ.கி.மா*

# நால்வருக்கு நீதிமன்றம் மரண தண்டனை தீர்ப்பு

புலத்சிங்கள - மஹரகம பிரதேசத்தில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பில் நால்வருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2012ஆம் ஆண்டு ஜூலை 4ஆம் திகதி லால் குணவர்த்தன. என்பவர் கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் குறித்த நால்வருக்கும் எதிராக குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் சந்தேகநபர்களுக்கு மரண தண்டனை விதித்து களுத்துறை மேல் நீதிமன்ற நீதிபதி நேற்று உத்தரவிட்டுள்ளார்.

களுத்துறை - புலத்சிங்கள பகுதியைச் சேர்ந்த நால்வருக்கே இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (2)

# இளவாலைக்கு புதிய பொலிஸ் பொறுப்பதிகாரி

இளவாலைப் பொலிஸ் நிலையத்தின் புதிய தலைமைப் பொறுப்பதிகாரியாக எம்.எஸ் பீரிஷ் டவுஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இளவாலைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய டி.எம். ஷிந்தக பண்டார யாழ். தலைமைப் பொலிஸ் நிலையத்துக்கு இட மாற்றம் செய்யப்பட்ட தனையடுத்தே இளவாலைப் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக பீரிஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இளவாலை பொலிஸ் நிலை யத்திற்கு தற்போது பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள பீரிஷ் இது வரை காலமும் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றி வந்தவராவார்.

யாழ் தலைமை பொலிஸ் நிலையத்திற்கு இட மாற்றம் செய்யப் பட்டுள்ள ஷிந்தக பண்டார இளவாலைப் பொலிஸ் நிலை யத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ் இடமாற்றங்கள் வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவின் ஆலோசனைக்கமைவாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. (2-4)

# இலங்கை மனிதவுரிமை நிலைமைகளில் முன்னேற்றம்

## அவுஸ்.பிரதமர் புகழாரம்

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து அவுஸ்திரேலிய பிரதமர் டோனி அப்போட் புகழாரம் சூட்டியுள்ளார். இலங்கையில் சமாதானம் நிலவி வருவதாகத் தெரிவித்துள்ளார். யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், மனித உரிமை நிலைமைகளில் பாரியளவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக சட்டம் , ஒழுங்கு நிலைமைகளில் சாதகத் தன்மை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நடுக் கடலில் புகலிடக் கோரிக்கையாளர் படகுகளை திருப்பி அனுப்பி வைக்கும் அவுஸ்திரேலியாவின் நடவடிக்கை இரகசியமானதல்ல என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். தேர்தல் காலத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் இதுவும் ஒன்றாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். பாதுகாப்பான முறையில் புகலிடக் கோரிக்கையாளர்களை கடல் வழியாக திருப்பி அனுப்பி வைப்பது தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாகும் என அவர் தெரிவித்துள்ளார். (2)


# பிரிவுத்துயர் பகிர்வு



### சிவகுரு சித்திவிநாயக பிரகாசம்

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் கைலாச பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு சித்திவிநாயக பிரகாசம் கடந்த முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### நாகலிங்கம் குலசிங்கம்

முல்லைத்தீவு குமுழமுனையைப் பிறப்பிடமாகவும் ஒட்டுச்சுட்டானை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் குலசிங்கம் நேற்று முன்தினம் புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பின்னர் பூதவுடல் புதுக்குளம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதி சந்திரமோகன் பூபதி

கொக்குவில் கிழக்கு பிரம்படியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Munchen ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரமோகன் பூபதி கடந்த முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு Stadtische Friedhofe Munchen Nordfriedhof, UngererstraBe 130,80805, Munchen, Germany என்னும் முகவரியில் நடைபெறும்.



### திருமதி சந்திரகுமார் மாலினி

துன்னாலை வடக்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், தற்போது பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரகுமார் மாலினி கடந்த 30 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று வியாழக்கிழமை பிரான்சில் தகனம் செய்யப்பட்டது.




### கந்தசாமி பரநிருபசிங்கம்

வேலணை மேற்கு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 89, ஓட்டுமட வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பரநிருபசிங்கம் நேற்று முன்தினம் புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் வேலணை அம்பலவி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






இத்தாலியில் திறமையான ஒரு திருடன் இருந்தான். அவன் பெயர் குக்கு. அவனுக்கு ஓர் ஆசை இருந்தது. தன்னைவிடப் பெரிய திருடனான மிக்குவை ஒரு முறையாவது பார்க்க வேண்டும் என்பதே அது.

ஒரு நாள் உணவு விடுதி ஒன்றில் குக்கு சாப்பிட்டுக் கொண்டு இருந்தான். சற்று நேரம் கழித்துப் பார்க்கும்போது அவனுடைய கைக் கடிகாரத்தைக் காணவில்லை, பெரும் திருடனான மிக்குதான் கடிகாரத்தைத் திருடியிருக்க வேண்டும் என்று குக்கு உறுதியாக நினைத்தான்.

அப்படி என்றால் என் எதிரில் அமர்ந்து சாப்பிடும் இவன்தான் மிக்குவாக இருக்க வேண்டும் என நினைத்த குக்கு உடனே எதிரிலிருந்தவனின் பணப்பையை திருடிவிட்டான்.

உணவைசாப்பிட்டுவிட்டு பணம் கொடுக்கப் போகும் போதுதான், மிக்குவுக்குத் தன் பணப்பை தொலைந்தது தெரிந்தது. அவர்கள் இருவரும் சிரித்துக் கொண்டார்கள். அன்று முதல் நண்பர்களும் ஆனார்கள். ஒரு நாள் குக்குவும் மிக்குவும் ராஜாவின் கஜானாவைக் கொள்ளை அடித்தார்கள். ராஜா மிகவும் சினம் அடைந்தார். எவ்வளவு துணிச்சல் இருந்தால் என் கஜானாவைக் கொள்ளை அடித்து இருப்பார்கள்? என்று நினைத்தார். ஏற்கனவே திருட்டுக் குற்றத்திற்காகச் சிறையில் இருக்கும் ஸ்னேர் என்னும் திருடனை அழைத்த ராஜா, கஜானாவைக் கொள்ளை அடித்தது யாராக இருக்கும் என்று சொன்னால் உன்னை விடுதலை செய்துவிடுகிறேன் என்றார்.

அரசே, நாட்டின் கஜானாவைக் கொள்ளை அடிக்கும் துணிவுடைய இரண்டு திருடர்கள் இருக்கிறார்கள். குக்குவும் மிக்குவும்தான் அவர்கள். நான் அவர்களை நேரில் பார்த்தது இல்லை. நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்களைப் பிடிப்பதற்கு ஒரு வழி இருக்கிறது என்ற ஸ்னேர், தன் திட்டத்தை விவரித்தான்.

அந்த இருவரும் இறைச்சியை மிகவும் விரும்பி உண்பார்கள். ஒரு நாள்கூட இறைச்சி இல்லாமல் அவர்களால் சாப்பிட முடியாது. இன்றே நாட்டில் இறைச்சி விலையை யாரும் வாங்க முடியாத அளவுக்கு அதிகரிக்க வேண்டும். அதன் பிறகும் யார் இறைச்சி வாங்கி உண்கிறார்களோ, அவர்கள்தான் அந்தத் திருடர்கள். நான் பிச்சைக்காரன் வேடத்தில் சென்று எல்லா வீடுகளிலும் பிச்சை கேட்கிறேன். யார் எனக்கு இறைச்சித் துண்டைப் பிச்சை இடுகிறார்களோ அந்த வீட்டின் கதவில் ஒரு சிவப்பு அடையாளம் இடுவேன். பிறகு, வீரர்களை அனுப்பி அவர்களைப் பிடிக்கலாம் என்றான் ஸ்னேர்.......

(தொடரும்)




- 1054 - சுப்பர்நோவா ஒன்று சீனர்களாலும், அரபுக்களாலும் அவதானிக்கப்பட்டது.
- 1187 -சிலுவைப் போர்கள்: சலாகுத்தீன் ஜெரூசலம் நாட்டு மன்னன் லூசிக்னனின் கை என்பவனை வென்றான்.
- 1634 - நியூ பிரான்சில் ட்ரோய்-ரிவியேரெஸ் நகரம் உருவாக்கப்பட்டது. இது பின்னர் கியூபெக் நகரமானது.
- 1636 - பிராவிடென்ஸ், றோட் தீவு கண்டுபிடிக்கப்பட்டது.
- 1776 - ஐக்கிய இராச்சியத்திடமிருந்து ஐக்கிய அமெரிக்கா விடுதலையை அறிவித்தது.
- 1803 - லூசியானா விலைக்கு வாங்கப்பட்ட செய்தி அமெரிக்க மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.
- 1810 - பிரெஞ்சுப் படைகள் ஆம்ஸ்டர்டாம் நகரைப் பிடித்தனர்.
- 1826 - அமெரிக்காவின் 3ஆவது அரசுத்தலைவர் தாமஸ் ஜெஃப்வர்சன், 2ஆம் அரசுத்தலைவர் ஜான் ஆடம்ஸ் இறந்த அதே நாளில் இறந்தார்.
- 1837 - உலகின் முதலாவது அதி-தூர தொடர் வண்டிப் போக்குவரத்து, பர்மிங்காம், லிவர்பூல் நகர்களுக்கிடையே தொடங்கப்பட்டது.
- 1865 - ஆலிஸின் அற்புத உலகம் வெளியிடப்பட்டது.
- 1879 - ஆங்கிலோ-சூலு போர் உலுண்டி என்ற இடத்தில் இடம்பெற்ற சமரின் பின்னர் முடிபுக்கு வந்தது.
- 1886- சுதந்திரச் சிலை பிரெஞ்சு மக்கள் ஐக்கிய அமெரிக்காவுக்கு அளித்தார்கள்.
- 1918 - ரஷ்யாவின் சார் மன்னன் இரண்டாம் நிக்கலாஸ் மற்றும் அவரது குடும்பத்தினர் போல்ஷெவிக்கினரால் கொல்லப்பட்டனர்.
- 1946 - 381 ஆண்டு குடியேற்றவாதிகளின் ஆட்சியின பின்னர் பிலிப்பைன்சு ஐக்கிய அமெரிக்காவிடமிருந்து விடுதலை அடைந்தது.
- 1947 - பிரித்தானிய இந்தியாவை, இந்தியா, பாகிஸ்தான் என இரண்டு நாடுகளாகப் பிரிக்கும் சட்டமூலம் ஐக்கிய இராச்சியத்தின் மக்களவையில் முன்வைக்கப்பட்டது.
- 1951 - வில்லியம் ஷாக்லி இருமுனை சந்தி திரிதடையம் கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவித்தார்.
- 1976 - என்டபே நடவடிக்கை: உகாண்டாவில் பாலஸ்தீனத் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட ஏர் பிரான்ஸ் விமானத்திலிருந்த அனைவரையும் ஷ்ரேலிய பாதுகாப்புப் படைகள் விடுவித்தனர்.
- 1988 - வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் முதல் தமிழ் மாநாடு பென்சில்வேனியாவில் இடம்பெற்றது.
- 1997 - நாசாவின் பாத்ஃபைண்டர் விண்கலம் செவ்வாய்க் கோளில் இறங்கியது.
- 1998 - ஜப்பான் நொசோமி விண்கலத்தை செவ்வாய்க் கோளை நோக்கி அனுப்பியது.
- 2006 - டிஸ்கவரி விண்ணோடம் 18:37:55 UTC மணிக்கு விண்ணுக்கு ஏவப்பட்டது.

பிறப்புகள்

- 1790 -ஜார்ஜ் எவரஸ்ட், உவெல்சிய புவியியலாளர் (இ. 1866)
- 1807 - கரிபால்டி, நவீன இத்தாலியின் தந்தை (இ. 1882)
- 1868 -ஹென்ரியேட்டா லீவிட், அமெரிக்க வானியலாளர் (இ. 1921)
- 1872 - கால்வின் கூலிஜ், ஐக்கிய அமெரிக்காவின் 30ஆவது குடியரசுத் தலைவர் (இ. 1933)
- 1898 - குல்சாரிலால் நந்தா, இந்தியாவின் 2ஆவது பிரதமர் (இ. 1998)

இறப்புகள்

- 965 - ஐந்தாம் பெனடிக்ட் (திருத்தந்தை)
- 1826 - ஜான் ஆடம்ஸ், ஐக்கிய அமெரிக்காவின் 2ஆவது குடியரசுத் தலைவர் (பி. 1735)
- 1826 - தாமஸ் ஜெஃப்வர்சன், ஐக்கிய அமெரிக்காவின 3ஆவது குடியரசுத் தலைவர் (பி. 1743)
- 1831 - ஜேம்ஸ் மன்றோ, ஐக்கிய அமெரிக்காவின் 5ஆவது குடியரசுத் தலைவர் (பி. 1758)
- 1850 - வில்லியம் கிர்பி, ஆங்கிலேயப் பூச்சியியலாளர் (பி. 1759)
- **1902 - சுவாமி விவேகானந்தர், இந்தியாவின் சமயத தலைவர் (பி. 1863)**
- 1910 - ஜியோவன்னி ஸ்கையாபரெலி, இத்தாலிய வானியலாளர் (பி. 1835)
- 1918 - ரஷ்யாவின் இரண்டாம் நிக்கலாஸ். (பி. 1868)
- 1926 - பியர் ஜார்ஜியோ ஃபிராசாதி, இத்தாலிய மதகுரு (பி. 1901)
- 1934 - [illegible] (பி. 1867)

## சுவாமி விவேகானந்தரின் பொன்மொழி வாசகங்கள்



கடவுள் இருந்தால் அவனை நாம் காண வேண்டும், ஆத்மா இருந்தால் அதனை நாம் உணர வேண்டும், அப்படியில்லையென்றால் நம்பிக்கை இல்லாமல் இருப்பது நன்று. பாசாங்கு போடுவதை விட நாத்திகனாக இருப்பதே மேல்.

உலகின் குறைகளை பற்றி பேசாதே. குறைகளை நோக்கி வருத்தப்படு, எங்குழ் நீ குறைகளை காண்பாய். ஆனால், நீ உலகுக்கு உதவி செய்ய விருப்பினால் உலகை தூற்றாதே, குறை சொல்லாதே. குறை சொல்லி உலகை இன்னும் பலவீனப்படுத்தாதே. உலகின் குறைகள், குற்றங்கள் எல்லாம் அதன் பலவீனத்தால் விளைபவை அல்லவா.

செயல் நன்று, சிந்தித்து செயலாற்றுவதே நன்று.. உனது மனதை உயர்ந்த இலட்சியங்களாலும், சிந்தனைகளாலும் நிரப்பு. அவற்றை ஒவ்வொரு நாளின் பகலிலும் இரவிலும் உன் முன் நிறுத்து அதிலிருந்து நல் செயல்கள் விளையும்.

வாழ்வும் சாவும், நன்மையும் தீமையும், அறிவும் அறியாமையும் ஆகியவற்றின் கலவைதான் மாயா, அல்லது பிரபஞ்சத்தின் இயல்பு. இவ் மாயத்துள் நீ எல்லையற்று மகிழ்ச்சிக்காக அலையலாம், ஆனால் நீ தீமையையும் காண்பாய். தீமையின்றி நன்மை இருக்குமென்பது சிறுபிள்ளைத்தனம்.

உலகில் உள்ள தீமைகளைப் பற்றியே நாம் வருந்துகிறோம். நம் உள்ளத்தில் எழும் நச்சு எண்ணங்களைப் பற்றி சிறிதும் கவலை கொள்வதில்லை. உள்ளத்தை ஒழுங்குபடுத்தினால் இந்த உலகமே ஒழுங்காகிவிடும்.

சுயநலமின்மை, சுயநலம் என்பவற்றைத் தவிர, கடவுளுக்கும் சாத்தானுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை.

எப்போதும் பொறாமையை விலக்குங்கள். இதுவரையிலும் நீங்கள் செய்யாத மகத்தான காரியங்களை எல்லாம் செய்து முடிப்பீர்கள்.

நமது நாடு வீரர்களை வேண்டி நிற்கிறது. வீரர்களாகத் திகழுங்கள்!

இளைஞர்களே, தேச முன்னேற்றம் என்னும் தேர்ச் சக்கரத்தைக் கிளப்புவதற்கு உங்கள் தோள்களைக் கொடுங்கள்.

இளைஞர்களே உங்களுக்கு என்னிடம் நம்பிக்கை இருக்குமானால் என்னை நம்புவதற்குரிய தைரியம் இருக்குமானால் ஒளிமயமான எதிர்காலம் உங்களுக்குக் காத்திருக்கிறது என்பேன்.

வலிமையே மகிழ்ச்சிகரமான நிரந்தரமான வளமான அமரத்துவமான வாழ்க்கை ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



88

...○நீங்கள் முதலமைச்சரான பிறகும் காரில் போகும்போது கலைஞர் பேச்சுக்களின் ஒலியிழைகளைக் கேட்டுக் கொண்டே பயணிப்பீர்களாமே! அது உங்கள் தமிழ்க் காதலுக்குச் சாட்சி.

நான் கலைஞர் மீது காதல் கொண்டவன் என்பது உங்கள் கவனத்தில் இருந்திருக்கிறது. ஆனாலும், உங்கள் பெருந்தன்மை என் கண்களை லேசாய்க் கசிய வைத்திருக்கிறது.

அப்போது நீங்கள் முதலமைச்சர். அப்போதுதான் என் பெயரைத் தமிழ்நாடு மெல்ல மெல்ல எழுத்துக் கூட்டத் தொடங்கியிருக்கிறது. என் நண்பர் க.மு.அரங்கனின் **வியர்வை முத்துக்கள்** என்ற கவிதை நூலைக் கலைஞர் வெளியிடுகிறார்; நான் முதற்பிரதி பெற்றுக் கொள்கிறேன்...

கலைஞரின் எழுத்துக்கள் என்னைக் கவிஞனாக்கின என்று அங்கே பேசுகிறேன்.

இது நடந்தது 18.05.1982 மாலை.


19.05.1982 காலை ஐ.ஜி. அலுவலகம் தூள் பறக்கிறது.

வைரமுத்து கலைஞரோடு ஏன் போனார்? எதற்குப் போனார்? எப்படிப் போனார்? என்று அவசர அவசாமாய் திராவகக் கேள்விகள் வீசித் திணறடிக்கிறீர்கள்.

என்னைப் பற்றிய கோப்பு ஒன்று உங்கள் பார்வைக்கு வருகிறது.

என் ஜாதகம் அறிகிறீர்கள்.

தேசிய விருது வாங்கிய பிறகு முதலமைச்சரான உங்களைச் சந்திக்




காமல் கலைஞரைச் சந்தித்து வாழ்த்துப் பெறுகிறேன்; கவனிக்கிறீர்கள்.

இத்தனைக்குப் பிறகும் எனக்கு இரண்டு முறை விருது தருகிறீர்கள்.

உங்கள் பெருந்தன்மை கண்டு நெகிழ்ந்து போகிறேன்.

உங்கள் வெற்றியிலிருந்து நாங்கள் கற்றுக் கொள்வதற்கு ஒன்றே ஒன்று உண்டு.

அதுதான்-

நசிந்து போனவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவது.

உங்கள் பாடல்களெல்லாம் தமிழ்நாட்டுக்கு நீங்கள் செய்த ரத்ததானம்.

ஒரு பாடலில் பாடலாசிரியன் காணாமல் போவது பாடலுக்கு வெற்றி ஆகாது என்றபோதிலும், பாடலாசிரியன் முகம் கரைந்து போய் நீங்கள் மட்டுமே முகம் காட்டுவது உங்கள் பாடல்களில் மட்டும்தான்.

உங்களுக்காகப் படைக்கப்பட்ட பாடல்கள் என்னையும் படைத்திருக்கின்றன.

எனக்குள் ஒரே ஓர் ஆசை மட்டும் ஆடிக்காற்றில் ஆடும் அகல் விளக்கின் சுடராய் ஆடிக் கொண்டேயிருந்தது.

நிகழ்விலிருக்கும் எல்லாக் கதாநாயகர்களும் என் பாடலை உச்சரித்திருக்கிறார்கள்; உங்கள் உதடுகளைத் தவிர.

ஒரே ஒரு பாட்டு உங்களுக்கு நான் எழுத ஆசைப்பட்டேன்.

ஆனால், என்னால் எழுத முடிந்தது- உங்களுக்கான இரங்கல் பாட்டுத்தான்.

உங்களுக்கு என்னால் படைக்க முடிந்தவை- உங்கள் இறுதி ஊர்வலமான காவியத் தலைவனுக்குக் கடைசி வரிகள்தாம்.

உங்கள் ராமாவரம் தோட்டத்திற்கு நான் முதன் முதலாய்ப் போனது உங்கள் அன்புத் துணைவியாருக்கு ஆறுதல் சொல்லத்தான்.

உங்களைப் பற்றி முதன் முதலில் நான் பேசியது உங்கள் இரங்கல் கூட்டத்தில்தான்.

அன்று சொன்ன இறுதி வரியே இன்றும் என் இறுதி வரி:

ஒரே ஒரு சந்திரன்தான்;
ஒரே ஒரு சூரியன்தான்;
ஒரே ஒரு எம்.ஜி.ஆர்தான்.

(தொடரும்)

-வைரமுத்து-

# உங்கள் பிறந்த எண் 05 இல் கூட்டெண் 01 இன் பலன்கள்



29

### தோற்றம்

புதனுடன் சூரியன் இணைந்து உண்டாகும் ஆதிக்கப் பலன் இவர்களுக்கு ஏற்படும். உயரமாக இருப்பர். சிவப்பாக இருப்பர். கண்கள், மூக்கு, முகம் எல்லாம் அளவெடுத்ததுபோல அழகாக இருக்கும். மூக்கு மேலிருந்து கீழ்வரை நீளமாக இருக்கும்.

காதுகள் சற்றுப் பெரிதாக இருக்கும். நெற்றி சம அளவில் இருக்கும். முடி மென்மையாக நீளமாகக் கருமையுடன் இருக்கும். ஒல்லியாக மிகவும் கவர்ச்சியாக இருப்பர். போகப் போக அளவாக சதையும் பிடிக்கும். முகம் சற்று நீண்டு 'ப' போல இருக்கும். பறகள் வரிசையாக நன்கு இருக்கும். மலர்ச்சியுடன் சிரித்த முகத்துடன் தோற்றமிருக்கும்.

### குணம்

பெருந்தன்மை உள்ள வீரர் இவர்கள். அறிவாளி, நல்லவர், நியாயத்தை மீறி நடக்க வெட்கப்படுவர். சட்டம், நீதி, சாத்திரங்களுக்குக் கட்டுப்பட்டே செயற்படுவர். ஆனாலும் எதையும் புதுமுறையில் மாற்றிச் செய்ய விரும்புவர். ஆடை, உணவு, போகும், வரும் வழி எதையுமே நவீனமானதாக இருக்க விரும்புவர். காலம் மாறுவதுபோல மாறி வளரும் விஞ்ஞானப் பொருட்களை வாழ்வில் பயன்படுத்த விரும்புவார்.

அடக்கி ஆளவும், பிறரைக் கட்டுப்படுத்தி வெற்றி பெறவும், எப்போதும் ஆனந்தமாக இருக்கவும் விரும்புவார். அறிவும், சுயேச்சையான போக்கும் இருக்கும்.

பரபரப்பாகவும் இருப்பர். செயற்படும் முன் கொஞ்சம் தயக்கமும் இருக்கும். மனம் குவிந்து எதிலும் ஈடுபடுவர். தொடங்கிய வேலை ஏதாயினும் எவ்வளவு கடினமாயினும் முடிக்கும்வரை ஓய மாட்டார். சுறுசுறுப்பும் கவர்ச்சியான தோற்றமும் இவர்களிடம் எப்போதும் இருக்கும். வேலையில் தம்முடன் இருப்பவரையும் விரைவாக வேலை செய்யும் படி விரட்டுவார். வேலையின்றி இவர்களால் இருக்கவே முடியாது.

நிதானமாக, சாதுவானவர் போல இருப்பார். ஆனால் அப்போதும் இவர்களது மனம் சும்மா இராமல் எண்ணங்களை ஓட்டிக் கொண்டிருக்கும். உண்மையில் அமைதியை விரும்புகிறவர்களே இவர்கள்.

சகிப்புத்தன்மை நிறைய இருக்கும். பணிவு, பெரியவர்களிடம் மரியாதை, தெய்வ பக்தி இருக்கும். வாழ்நாள் போகப் போக கொஞ்சம் பிடிவாதமும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று செயற்படும் போக்கும் யார் என்ன சொன்னாலும் கேட்காத தற்குறிப் போக்கும் ஏற்படும்.

இதற்கேற்ப வருமானம் அதிகமாகும். சங்கோசம் அதிகமாகும். பிறர் மனம் புண்படும்படி பேசுவதும் உண்டாகும். இரக்கம், பிறருக்கு உதவுதல் இருக்கும். சொந்தத் தொழில் செய்வர். அதில் வெற்றி உண்டாகும். தேவைப்படுபவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து தருவார். முயற்சியால் முன்னேறுவர். இடைவிடாமுயற்சி, உழைப்பு, திறமை இவர்களிடம் இருக்கும். நண்பர்களுடன் இருப்பதில் பிரியம் கொள்வர். அவ்வப்போது சீட்டாடுதல், பிற விளையாட்டுக்களிலும் திறமை இருக்கும். சூதாடிப் பணமும் பெறலாம்.

அழகு ரசனை உள்ள இவர் கலைகளிலும் பிரியம் உள்ளவர். நரம்புத் தளர்ச்சி இருக்கும். விரைவில் டென்ஷன் அடைவார். பெற்றவர்களிடமிருந்து இளம் வயதில் தனித்துப் போய் வசிப்பார்.

### குடும்பம்

பெற்றோர் ஆதரவை எதிர்பார்த்திருக்க மாட்டார். சுயமாக வேலையில் சேர்ந்து உழைப்பார். நண்பர்களின் உதவி கிட்டும். அனைவரிடமும் அட்ஜஸ்ட் செய்து பழகும் இவர்கள் யாரிடமும் அடிமைப்படவும் மாட்டார். தனிச் சிறப்பை உடையவரே. காதல் புரிவர். பெண்களுடைய குறைகளை பாராட்டி விலக மாட்டார். எவருடனும் மண வாழ்க்கைக்கு இணங்கி சேருவார். தம் குடும்பக் கடமையை விட மாட்டார்.

தாய், தந்தைக்கும், சகோதர சகோதரிக்கும் செய்வதைச் செய்வார். நட்பை மறவார். தாமே மணம் செய்து கொண்டாலும் பெரியோர் செய்து வைத்த கல்யாணமாயினும் சண்டை சச்சரவின்றி இருக்காது. சண்டைக்குக் காரணமாகி விட்டு ஒன்றும் அறியாதவர் போல இருப்பார். பார்ப்பவர் இவர்மேல் பரிதாபப்படுவார். உற்றாரும் உறவினரும்கூட இவர் பிரச்சினை தீர உதவ முடியாது. குடும்ப வாழ்க்கை நீட்டிப்பது கடினமே. இதேபோல வாரிசும் இவருடன் இருக்கும் என்று சொல்ல முடியாது. பிற்பகுதி வாழ்க்கை கொஞ்சம் அமைதியாகப் போகும். இவர்கள் வருமானத்திற்கு சிரமப்பட மாட்டார். சொத்துக்களும் சேர்த்திடுவார்.

### தொழில்

தொழிற்சாலைகளில், அரசாங்க அலுவலகங்களில் அதிகாரிகளாக இருப்பர். ஆனாலும் சொந்தத் தொழில் செய்யவே விரும்புவார். மோட்டார் பிற இயந்திரங்கள் தொடர்பான உற்பத்தி, விற்பனை இடங்களில் பணி புரிவார். அக்னி தொடர்பான உலோகம் உருக்கும் உலைகள் உள்ள இடத்திலும் வேலை செய்வார். தொலைபேசி, தந்தி, தபால் அலுவலகங்களிலும் அரசுத் தூதராகவும் பணி புரிவார். கலைஞராகவும் இருப்பார். எழுத்து, பண விவகாரமுள்ள தொழிலகங்களிலும் வேலை செய்வார். பதிப்பகம், வங்கி, நிதி நிறுவனங்களில் எல்லாம் பணி புரிவார். ஏஜன்சிகளும் நடத்துவார். எப்படியாயினும் பணம் சேர்த்து விடுவார்.

### நோய்

வயிறு பாதிப்புறும். கபத்தாலும் பித்தத்தாலும் வரும் நோய்கள் தாக்கும். அக்னி, அமில விபத்தேற்படலாம். குடிப் பழக்கம் உண்டாகும். இதனால் வரும் கோளாறுகளும் நோயாகும். நரம்புத் தளர்ச்சி, இதயப் பாதிப்பு ஏற்படும். பிற்பகுதி வாழ்வில் சர்க்கரை நோய் பாதிக்கும். ஆனாலும் இறுதிவரை சுறுசுறுப்புடன் இருப்பார். உயர் இரத்த அழுத்தம் உண்டாகும்.

(தொடரும்)

-கணித்தவர்-ஸ்வாமி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தபாய பாராளுமன்றம் வந்தால் கேள்விக்கணைகளைத் தொடுக்கலாம்

## தேசிய ஐக்கிய முன்னணித் தலைவர் கூறுகின்றார்



(கொழும்பு)

**கோத்தபாய ராஜபக்ஷ பாராளுமன்றம் வந்தால் அவரின் திரை மறைவு நாடகத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். அவர் செய்துள்ள அனைத்து அநியாயங்களுக்கு எதிராகவும் அவரை நிற்க வைத்து கேள்விக்கணைகளைத் தொடுக்கலாம் என தேசிய ஐக்கிய முன்னணி தலைவரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான அசாத் சாலி தெரிவித்துள்ளார்.**

அதிகாரத்தைப் பகிர்ந்து நாடடை ஐக்கியப்படுத்துவோம் என்ற அமைப்பு கொழும்பில் நடத்திய ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இங்கு அவர் மேலும் கூறியதாவது,

"பொதுபல சேனாவுடன் தனக்கு தொடர்பு உள்ளதை யாராவது நிரூபித்தால் தான் பதவி விலகத் தயார் என்று பாதுகாப்புச் செயலாளர் இன்று கூறுகின்றார். அவர் அப்பாவி வேடம் போட முனைகின்றார் என்பது நாட்டு மக்களுக்கு நன்கு தெரியும். அவர் எப்படியோ விரைவில் இராஜினாமா செய்யத் தான் போகிறார். காரணம் அவருக்கு நேரடி அரசியலில் இறங்கும் ஆசை வந்துள்ளது. அண்ணன் அழைத்தால் தான் அரசியலுக்கு வரத் தயார் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அவர் அப்படி வந்தால் அது மிகவும் நல்லது. எமது பணிகள் இலகுவாகும். அவரை இப்போது இருக்கும் இடத்தில் வைத்துக் கொண்டு அவரிடம் கேள்விகள் கேற்க முடியாது. பாராளுமன்றம் வந்தால் அவரின் திரை மறைவு நாடகத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படும். அவர் செய்துள்ள அனைத்து அநியாயங்களுக்கு எதிராகவும் அவரை நிற்க வைத்து கேள்விக் கணைகளைத் தொடுக்கலாம். அவர் தனது செய்கைகளுக்காக பதில் சொல்ல வேண்டியிருக்கும். அதைத் தான் நாமும் விரும்புகின்றோம்.

பொதுபல சேனாவுக்கும் அவருக்கும் தொடர்பு உள்ளதாக நாங்கள் யாரும் சொல்லவில்லை. அது அவராகவே நிரூபித்த விடயம். அதற்கான சான்றுகளை ஊடகங்கள் குறிப்பாக இணையத் தளங்களும் சமூக வலை தளங்களும் தேவையான அளவு வெளியிட்டுள்ளன. பிரபல ஊடகவியலாளர் விக்டர் ஐவன் அண்மையில் இந்த தொடர்புகள் பற்றி தெளிவானதோர் கட்டுரையையும் எழுதி வெளியிட்டுள்ளார். அதனால் தான் இப்போது இணையத்தளங்கள் மீதும் சமூக வலை தளங்கள் மீதும் குரோதம் காட்டப்படுகின்றன. அவற்றை முடக்குவதற்கான திட்டமிட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அண்மையில் குற்றம் சாட்டியுள்ளது.

இப்படியே போனால் இந்த நாட்டில் எங்குமே பாதுகாப்பு இல்லை என்றுதானே அர்த்தம் கொள்ள வேண்டியுள்ளது. எல்லாம் முடிந்து விட்டது. எதிர்க்கட்சி தான் இதை இன்னமும் பெரிதுபடுத்தி வருகின்றது என அரசாங்கம் கூறுகின்றது. ஆனால் எதுவுமே முடிந்தபாடாகத் தெரியவில்லை. பள்ளி வாசல்களுக்கு தீ வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எந்தத் தேவையும் எமக்கு கிடையாது. நீங்களும் உங்களது ஆதரவு பெற்றவர்களும் தீ வைப்பதையும் கல்லெறிவதையும் முதலில் நிறுத்துங்கள். அப்போதுதான் எல்லாமே முடிவுக்கு வரும். (2)

# விசேட தூதுவராக பசில் சீனாவுக்கு அவசர பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விசேட தூதுவராக சீனாவுக்கான அவசர விஜயம் ஒன்றை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மேற்கொண்டிருக்கின்றார். இலங்கை தொடர்பான ஐ.நா. விசாரணை ஆரம்பமாகவுள்ள நிலையில் பசில் ராஜபக்ஷ அவசரமாக சீனாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுவதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

சீனாவின் உதவிப் பிரதமர் வெஹ் யாங் குடன் இலங்கையின் நிலைமைகள் குறித்து பசில் ராஜபக்ஷ விரிவான பேச்சுக்களை நடத்தியிருப்பதாக சீனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கையுடன் இணைந்து செயற்படுவதற்கு சீனா விரும்புவதாக இந்தச் சந்திப்பின் போது தெரிவித்த சீனாவின் உதவிப் பிரதமர் இரு நாடுகளின் ஜனாதிபதிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

ஏற்கனவே முன்மொழியப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான பேச்சுக்களை இரு நாடுகளும் கூடிய விரைவில் ஆரம்பிக்க வேண்டும் எனவும் தெரிவித்த அவர், இலங்கையில் சீனாவின் முதலீடுகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் குறிப்பிட்டார். (2)

# அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க இருவார காலம் நீடிக்கப்பட்டுள்ளது

## ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தோற்றுவதற்காக தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பித்த பாடசாலை பரீட்சார்த்திகளுக்கு அடையாள அட்டைகளை தாமதமின்றி விநியோகிப்பதற்கு விசேட வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் எம்.எஸ்.சரத் குமார தெரிவித்தார்.

வருடாந்தம் சுமார் ஐந்து இலட்சம் மாணவர்கள் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் நோக்கில் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்கின்றனர். எனினும் விண்ணப்பிப்பதற்கான காலம் முடிவுற்ற நிலையில் இதுவரை சுமார் இரண்டு இலட்சம் மாணவர்களின் விண்ணப்பங்கள் மாத்திரமே கிடைத்துள்ளதாகத் தெரிவித்த அவர், எஞ்சியுள்ள மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இரண்டு வாரங்கள் காலக்கெடு வழங்கவுள்ளதாக மேலும் தெரிவித்தார்.

பாதுகாப்பு மற்றும் சமகால விடயங்கள் தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு கொள்ளுப்பிட்டியிலுள்ள பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மையத்தில் இடம்பெற்றது. பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் ஆட்பதிவுத் திணைக்களம் பாடசாலை மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டையை விநியோகிப்பதற்காக முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்கள், இதன்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருததுத்தெரிவித்த ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் மேலும் விளக்கமளிக்கையில்,

2014ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதிக்கு 16 வயது பூர்த்தியான மாணவர்கள் தனது பாடசாலையின் ஊடாக தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப் பத்திரங்களை கடந்த மே மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு சகல பாடசாலை அதிபர்களுக்கு எமது திணைக்களத்தின் ஊடாக நாம் அறிவித்த போதிலும் இதுவரையும் இரண்டரை இலட்சம் மாணவர்களின் விண்ணப்பங்களே கிடைத்துள்ளன.

உரிய காலத்திற்கு பின்னர் தாமதித்து கிடைக்கப்பெற்ற போதிலும் சுமார் ஐயாயிரம் விண்ணப்பங்கள் முத்திரை ஒட்டப்படாமலும் அவற்றில் 3ஆயிரத்து 387 விண்ணப்பங்கள் கையொப்பம் இடாமலும் குறைபாடுகளுடன் காணப்படுகின்றன. இவ்வாறான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் மீண்டும் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்ப உரிய முறையில் நிரப்பி எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதுபோன்ற அசௌகரியங்களை தவிர்த்துக் கொள்வதற்காகவே நேர காலத்துடன் விண்ணப்பிக்குமாறு வழக்கமாகோருவதர்கத் தெரிவித்த அவர், எஞ்சியுள்ள மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இரண்டு வாரங்கள் காலக்கெடு வழங்கியுள்ளது என்றார். (அ-2)

# இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகளில் ஜப்பான் முதலிடம்

இலங்கைக்கு 2014ஆம் ஆண்டு அதிக கடன்களை வழங்கிய நாடுகள் வரிசையில் ஜப்பான் முதலிடம் பெற்றுள்ளது.

புதிய பாலம் ஒன்றுக்காக 342 .8 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு வழங்குவதுடன் முதல் இடத்தை ஜப்பான் பெறுகிறது.

இந்தநிலையில் கடந்த நான்கு மாதங்களில் மாத்திரம் இலங்கை, 678.2 மில்லியன் டொலர்களை பல நாடுகளில் இருந்தும் கடன்களாக பெற்றுள்ளது.

இதன்படி சீனாவிடம் இருந்து 300 மில்லியன்டொலர்களும்குவைத்திடம் இருந்து 10 மில்லியன் டொலர்களும் அடங்குகின்றன.

ஜப்பானின் கடன்கள் யாவும் வங்கி வட்டியின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

குவைத்தின் கடன் 0.5 வட்டி வீதத்தில் 15 வருட திருப்பிச் செலுத்துகை உடன்படிக்கையில் வழங்கப்படுகின்றன.

இதனைத்தவிர ஈரான், ஆசிய அபிவிருத்தி வங்கி, இந்தியா உட்பட்ட நாடுகளில் இருந்தும் இலங்கைக்கு கடன்கள் கிடைத்துள்ளன.

இதேவேளை 2014ஆம் ஆண்டு இலங்கை ஆயிரத்து279 மில்லியன் டொல ர்களை 31சதவீத வட்டியில் திருப்பி செலுத்தவேண்டியுள்ளது. (2)



மல்லாகம் புனித சதா சகாய மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழாவின் போது திருப்பலி இடம்பெறுவதையும் மாதாவின் திருச்சொரூப பவனி இடம்பெறுவதையும் திருப்பலியில் பங்கு கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மானிப்பாய்ச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விவகாரங்களில் இலங்கை பாரிய பின்னடைவை சந்திக்கின்றது

## சஜித் பிரேமதாச எம்.பி.தெரிவிப்பு

வெளிநாட்டு இராஜதந்திரிகள் 62 பேரில். 35 பேர் அரசியல் ரீதியாக நியமிக்கப்பட்டவர்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை அங்குனுகொலபெலஸ்ஸ பகுதியில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்.

பல்வேறு பரீட்சைகள் நடத்தி வெளிவிவகார சேவ்வ தொடர்பிலான கல்வித் தகைமை உடையவர்களே இராஜதந்திர சேவையல் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

சர்வதேச ரீதியிலான தொடர்புகளைப் பேணுவதற்கு இராஜதந்திரிகளுக்கு தொடர்பாடல் திறன் இருக்க வேண்டும்.

ஹிமில்டன் அமரசிங்க, ஜயந்த தனபால போன்றவர்கள் நாட்டுக்கு பாரியளவில் கீர்த்தியை ஈட்டிக் கொடுத்துள்ளனர். எனினும், தற்போது அதிகளவிலான இராஜதந்திரிகள் தகுதியற்றவர்கள்.

இதனால் சர்வதேச விவகாரங்களில் இலங்கை பாரிய பின்னடைவை எதிர்நோக்கி வருகின்றது.

இவ்வாறு பாரியளவில் பணத்தை செலவழித்த இராஜதந்திரிகளுக்கு சம்பளமும் ஏனைய சலுகைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

எனினும், நாட்டின் நன்மதிப்பு குறித்து பிரசாரம் செய்ய சர்வதேச நிறுவனங்களின் உதவி நாடப்பட்டுள்ளது.

இரண்டு அமெரிக்க நிறுவனங்களின் ஊடாக நாட்டின் நன்மதிப்பை அபிவிருத்தி செய்ய பிரசாரம் செய்யப்படுகின்றது.

இதற்காக பாரியளவில் பணம் செலவிடப்படுகின்றது. இவ்வாறான தகவல்களை வெளியிட்டால் அதனை சர்வதேச சதித் திட்டம் என அரசாங்கம் பிரசாரம் செய்கின்றது என சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். (2)

# பொதுபல சேனாவின் நிகழ்வுகளில் பாதுகாப்பு செயலாளர் பங்கேற்கவில்லை

## பாதுகாப்பு அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுபல சேனா இயக்கத்தின் எந்தவொரு நிகழ்விலும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பங்கேற்றதில்லை என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

பொதுபல சேனா இயக்கத்துடனோ அல்லது அதன் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞான சார தேரருடனோ பாதுகாப்புச் செயலாளர் எவ்விதமான தொடர்புகளையும் பேணவில்லை என பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பேச்சாளர் ருவான் வனிகசூரிய தெரிவித்துள்ளார்.

குறித்த இயக்கத்திற்கு பாதுகாப்புச் செயலாளர் நிதி உதவிகளை வழங்கியதாக சில உள்நாட்டு வெளிநாட்டு ஊடகங்களில் வெளியான தகவல்களும் அடிப்படையற்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் காலியில் தியான மண்டபமொன்றின் திறப்பு விழாவில் பாதுகாப்புச் செயலாளர் பங்கேற்றதாகவும். அந்த நிகழ்வு பொதுபல சேனாவினால் ஒழுங்கு செய்யப்பட்டதல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பௌத்த கலாசார மையத்தின் ஸ்தாபகர் கிரம விமலஜோதி தேரர் மற்றும் களனி பல்கலைக்கழகத்தின் வேந்தர் சுமனஜோதி நாயக்க தேரர் ஆகியோரின் அழைப்பிற்கு அமையவே பாதுகாப்புச் செயலாளர் இந்த நிகழ்வில் பங்கேற்றார் என குறிப்பிட்டுள்ளார்.

பொதுபல சேனா அமைப்பு இந்த நிகழ்விற்காக அழைப்பு விடுக்கவில்லை என்ற போதிலும் நிகழ்வில் கலபொட அத்தே ஞானசார தேரரும் பங்கேற்றிருந்தார் என அவர் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனிய பிரஜை ஒருவரினால் நன்கொடையாக வழங்கப்பட்ட காணியில் இந்த தியான மண்டபம் அமைக்கப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார். (2)

# ஹலால் சான்றிதழை மீள அறிமுகம் செய்ய வேண்டும்

## வட்டரக்கே விஜித தேரர் தெரிவிப்பு

ஹலால் சான்றிதழை மீள அறிமுகம் செய்ய வேண்டுமென ஜாதிக பலசேனா அமைப்பின் தலைவர் வட்டரக்கே விஜித தேரர் தெரிவித்துள்ளார்.

போலியானதும், பகட்டானதுமான நடவடிக்கைகளினால் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த முடியாது.

மீண்டும் நாட்டில் ஹலால் முறைமையை அமுல்படுத்துவதன் மூலம் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த முடியும்.

பௌத்த மத வரலாற்றில் மிகப் பெரிய பொய்யை பொதுபல சேனா செய்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தன்னைத் தானே காயப்படுத்திக் கொண்டதாக கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட விஜித தேரர், பாணந்துறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு திரும்பிய போது செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்துள்ளார். (அ-2)

## மாணிக்கவாசகர் குரு பூசை

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திண்ணக்களம் நடத்தும் மாணிக் கவாசக சுவாமிகள் குரு பூசை விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மா.அனந்தலெட்சுமி தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கூட்டுறவு ஆணைக்குழு செயலாளர் பிரபா கந்தசாமி ஐயர் கலந்துகொண்டு சிறப்பிப்பார்.

இந்நிகழ்வில் சுழிபுரம் பாரதி கலா மன்ற அறநெறிப்பாடசாலை, மூளாய் சித்திவிநாயகர் ஞானஒளி அறநெறிப் பாடசாலை மாணவர்களது கலை நிகழ்வுகளும் **மாணிக்கவாசகர் காட்டிய சிவ வழிபாடு** எனும் தலைப் பில் சைவப்புலவர் கந்த சத்தியதாசனின் சிறப்பு சொற்பொழிவும் இடம்பெறும். (4-2)

# செய்மதியை விண்வெளிக்கு அனுப்ப 400 மில்லியன் தேவை

## திறைசேரியிடம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் தேவை கருதி, உள்நாட்டு விஞ்ஞானிகளால் தயாரிக்கப்பட்டுவரும் செய்மதியை விண்வெளிக்கு அனுப்புவதற்கு 400 மில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும், இத்தொகையை பெற்றுத் தருமாறு திறைசேரியிடம் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு கோரியுள்ளது.

இலங்கையில் விண்வெளி தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் ஆதர் சி.கிளார்க் நிறுவனத்தினூடாக உள்ளூர் விஞ்ஞானிகளால் செய்மதியொன்றை விண்வெளிக்கு அனுப்புவதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தொழில நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சிறியதொரு செய்மதியை விண்வெளிக்கு அனுப்பி, அதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய தொழில்நுட்ப வசதிகளைப் பெற்றுக்கொள்ள உள்ளூர் விஞ்ஞானிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

நெனோ செடலைட் என்று இந்த சிறிய செய்மதி அழைக்கப்படுகிறது. இது இலங்கை விஞ்ஞானிகளின் முழுமையான திறனினால் மட்டுமே நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

எவ்வாறாயினும் இதனை விண்வெளிக்கு அனுப்புவதற்கான ரொக்கெட்டுக்காக் இந்தியா அல்லது சீனாவின் உதவியை நாட வேண்டி ஏற்படும் என்று அமைச்சர் மேலும் கூறினார். (அ-2)

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்




## நயினை நாகபூஷணி அம்மனுக்கு கைலைக்காட்சி

### வரம் தருவாய்

சிவனின் ஒரு பாதியானவளே
கணபதி கந்தனின் - அன்னையே
எல்லோருக்கும் தாயானவளே
நயினை - நாகபூஷணியே
நாகம் விரிந்து
குடைபிடிக்க - அதில்
கொலுவீற்றிருக்கும்
குங்குமக்காரி-நாகபூஷணியே
இந்த -விழாக்கோலத்தில்
அலையாக எழுந்துவா
உன்-திருக்கோலத்தை காண

வீ.அருள்ராஜா (பாலிநகர்)

### குறையொன்றும் இல்லை

*அலைகடல் தாலாட்ட*
*அடியவர் துயர் துடைக்க*
*சப்ததீவின் மத்தியில்*
*நித்தம் அருளாட்சி செய்யும்*
*அன்ன பூரணியே - உன் பாதம்*
*நாடி தினம் தொழும்*
*அடியவர் துயர் துடைத்து*
*அவர் தம் மனக் குறையகற்றுவாய்*
*மணிபல்லவத்தாளே ...!*

உதயம் ரூபன் (நயினை)

### அவலத்தை போக்கிடம்மா!

சிலையாக அமர்ந்தாயே
சர்ப்ப பூஷணி
பக்தர்கள் நலனை காப்பவளே
நாக பூஷணி
மலையோடு வளர்ந்தவளே
மாதேசி
அலை கடல் கடந்து
உனதடி பற்றி நிற்கும்
அடியவர்கள் அவலத்தை போக்கிடம்மா

சிந்து சிவதாஸ்.

### நயினைத் தாயே சரணம் அம்மா

ஆதிபராசக்தியே, அகிலம் புகழும் அன்புத்தாயே
ஆதிமுதலாக நாகம் குடை பிடிக்க இனிதே அமர்ந்து
நயினையிலே ஒய்யாரமாய் குடிகொண்டு நாடித்தேடி
நாயாய் ஓடி வந்து தூய அன்போடு உன்தாள்
சரணம் என்று தஞ்சமடைந்து நின்திருவருள் வேண்டி
நிற்கும் எமக்கு
இன்முகம் காட்டி எம்மைக் காத்திடு நயினைத் தாயே!

நீரூர் முருகதாசன்.

### எம்மை காப்பவளே !

நயினையில் உறைகின்ற எங்கள் தாயே
நம்பி வரும் அடியார்குறை தீர்ப்பாயே
நாற்திசையும் ஒளி வெள்ளம் தந்தாயே
நாதியற்ற எம் இனத்தை காப்பாயே
எல்லாம் வல்ல எங்கள் நாகபூஷணித்தாயே

வ.உதயதாஸ் (புலோலி, மேற்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுங்குழிகளில் நடந்த சத்திரசிகிச்சை – ஐரோப்பிய நாடுகளின் போர்க்களம்

உலகப்போர் என்றாலே ஐரோப்பிய நாடுகளின் போர்க்கள நெடுங்குழிகளில் நடந்த இரத்தக்களரிகள்தான் நம் நினைவுக்கு வரும். அதுதான் உண்மையும். இதுதவிர, உலகப்போர் குறித்து நமக்குத் தெரியாத எவ்வளவோ விடயங்கள் இருக்கின்றன. உலகப்போர் சீனா வரை ஊடுருவியது என்பது உங்களுக்குத் தெரியுமா? ஆசியா, வடக்கு அமெரிக்கா, கரீபியத் தீவுகள், அவுஸ்திரேலியா, ஆபிரிக்கா போன்ற பகுதிகளிலிருந்தும் வந்த வீரர்கள் இந்தப் போரில் ஈடுபட்டது உங்களுக்குத் தெரியுமா?

முதலாம் உலகப்போர் தொடர்பாக நீங்கள் அறிந்திராத, ஆச்சரியமளிக்கும் 12 தகவல்கள்....

**பிரான்சில் வெடித்த குண்டுச் சத்தம் லண்டன் வரை கேட்டது**

போர்க்களத்தின் நெடுங்குழிகளிலும் சகதியிலும் மூர்க்கமாகப் போர் நடந்துகொண்டிருந்தபோது, போர் வீரர்களின் கால்களுக்கு அடியில் வேறு வகையான போர் ஒன்று நடந்துகொண்டிருந்தது. கண்ணிவெடி புதைப்பவர்களின் குழு ஒன்று, எதிரிகளின் நெடுங்குழிகளில் கண்ணிவெடிகளைப் புதைத்து வைப்பதற்காக 100 அடிவரை குழி தோண்டியது. பெல்ஜியத்திலுள்ள மெஸேன் ரிட்ஜ் என்ற பகுதியில் 19 சுரங்க வழிகளில் 4.08. 233 கிலோ எடையுள்ள வெடிபொருட்கள் ஒரே நேரத்தில் வெடிக்கச் செய்யப்பட்டன. இதனால், ஜேர்மனியின் முன்வரிசைப் படையினரில் பெரும்பாலானோர் இறந்து போனார்கள். 225 கிலோ மீற்றர் தொலைவில், பிரிட்டிஷ் பிரதமரின் இல்லம் இருந்த டௌனிங் தெரு வரை வெடிச் சத்தம் கேட்டிருக்கிறது.

**மரண தண்டனையை எதிர்கொண்ட பத்திரிகையாளர்கள்**

போரின் நடப்புகள் குறித்து செய்தி சேகரிப்பதற்காகச் சில பத்திரிகையாளர்கள் தங்கள் உயிரையே பணயம் வைத்தனர். போரின் தொடக்கத்தில் அதிகார மட்டத்திலிருந்து தகவல்கள் கசிவதைத் தடுக்கும் வகையில் பத்திரிகையாளர்களுக்கு அரசாங்கங்கள் தடை விதித்தன. இராணுவத் தலைமையைப் பொறுத்தவரை, போர் குறித்துச் செய்திகள் வெளியிடுவதென்பது எதிரிகளுக்கு உதவுவதே. எனவே, பிடிபடும் பத்திரிகையாளர்கள் மரண தண்டனையை எதிர்கொண்டார்கள்.

**பிரிட்டிஷ் படையினருக்கு ஒவ்வொரு வாரமும் வந்த கடிதங்களின் எண்ணிக்கை: 1.2 கோடி**

பிரிட்டனிலிருந்து அனுப்பப்பட்ட கடிதம் பிரான்சில் உள்ள போர் முனையை அடைவதற்கு எடுத்துக் கொண்ட காலம் வெறும் இரண்டு நாட்கள்தான் என்பது நமக்கு வியப்பளிக்கிறதல்லவா? இந்தக் கடிதங்களின் பயணம் தொடங்கிய இடம் ரீஜெண்ட்பார்க் என்றபணியகம்தான்.

போர்முனையில் உள்ள நெடுங்குழிகளை எட்டும் முன் இந்த இடத்தில்தான் கடிதங்கள் வகை வகையாகப் பிரிக்கப்பட்டன. போர் முடிவதற்குள் 200 கோடி கடிதங்களும் 11கோடியே 40 இலட்சம் பொதிகளும் போர்முனையிலிருந்த பிரிட்டிஷ் வீரர்களுக்குப்பட்டுவாடாசெய்யப்பட்டன.

**போர் பூசிய மஞ்சள்**

ஒருதலைமுறை ஆண்கள் போருக்குச் சென்றுவிட்டதால் வேலைகளைச் செய்ய வேண்டிய ஆண்கள் இல்லாததாலும், வறுமையின் காரணமாகவும், அதுவரை ஆண்கள் மட்டுமே செய்துவந்த வேலைகளைச் செய்யப் பெண்களும் பணிக்கப்பட்டனர். மோசமான பணிச் சூழல்களிலும், அபாயகரமான வேதிப்பொருட்களைக் கையாள வேண்டிய நிலையிலும் பெண்கள் நீண்ட நேர வேலை பார்த்தார்கள். டி.என்.டி. வெடிமருந்து தொழிற்சாலைகளில் வேலை பார்த்த பெண்கள் மஞ்சள் பறவைகள் என்று அழைக்கப்பட்டனர். நச்சு மஞ்சள் காமாலை காரணமாக அவர்களுடைய தோலின் நிறம் மஞ்சளானதால் அவர்களுக்கு இந்தப்பெயர்.

**சீரமைப்பு அறுவைச் சிகிச்சையைத் தந்தது முதல் உலகப்போர்**

முதல் உலகப் போரில் பலருடைய முகங்களிலும் காயமேற்படுவதற்கு முக்கிய காரணம் குண்டுச் சிதறல்கள்தான். தோட்டாக்கள் நேராகத் துளைத்துச் செல்பவை. ஆனால், குண்டுச் சிதறல்களில் வெளிப்பட்ட உலோகச் சில்லுகளோ முகத்தையே அலங்கோலமாகக் கிழிக்கக் கூடியவையாக இருந்தன. ஹேரல்ட் கிலஸ் என்று அறுவைச் சிகிச்சை மருத்துவர் இதையெல்லாம் பார்த்து அதிர்ச்சியுற்று, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் நடவடிக்கைகளில் இறங்கினார். இதன் விளைவாக முகச் சீரமைப்புத் துறையின் முன்னோடித் தொழில்நுட்பங்களை அவர் கொண்டு வந்தார்.

**போரின் முடிபில் அநாமதேயமாக இறந்துபோன வில்ஃப்ரெட் ஓவன்**

வில்ஃப்ரெட் ஓவன், முதல் உலகப் போர் காலகட்டத்தைச் சேர்ந்த தற்போது பிரபலமடைந்த கவிஞர்களில் ஒருவர். போர் முடிவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் போரில் அவர் மரணமடைந்தார். கருணை, பயங்கரம் ஆகிய இரண்டும் கலந்த ஒரு பார்வையை போர் மீது கொண்டிருந்த சிலரில் அவரும் ஒருவர். ஆனாலும், முதலாம் உலகப் போர் குறித்த மிகவும் அசலான பார்வை ஓவனுடையது என்பதை 1960 களில்தான் இலக்கிய முகாம்களைச் [illegible]கள் முடிபு செய்தனர். அதன் விளைவாக, போர் தொடர்பான இரண்டு பெரும் கவிதைத் தொகுப்புகளை– பெருமளவில் ஓவனின் கவிதைகளைக் கொண்டு வெளியிட்டனர்.

**பிரிட்டனின் மிக இளம் வீரருக்கு வயது 12!**

முதல் உலகப்போரின் போது தன்னுடைய வயது 12 என்பதை மறைத்து, பொய்யான வயதைச் சொல்லி சிட்னி லூயிஸ் என்னும் சிறுவன் இராணுவத்தில் சேர்ந்தான். ஆர்வத்தின் காரணமாக, பெரியவர்களுடன் சேர்ந்துகொண்டு போரிட்ட சிறுவர்களில் அவனும் ஒருவன். தேசப் பற்றினால் உந்தப்பட்டும் மந்தமான தினசரி வாழ்க்கையிலிருந்து தப்பிக்கவும் தான் அந்தக் காலத்துச் சிறுவர்கள் அப்படிச் செய்தார்கள்.




**கிட்டத்தட்ட பிரிட்டனில் பொருளாதாரச் சரிவையே ஏற்படுத்திவிட்டது முதல் உலகப்போர்**

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பொருளாதார வல்லரசாக இருந்தது பிரிட்டன். எந்த நாடும் எதிர் கொள்ளாத அளவுக்குப் பொருளாதார [illegible] போர் பிரிட்டனுக்கு ஏற்படுத்தியது. எடுத்துக்காட்டாக, 1918, செப்ரெம்பர் மாதத்தின் ஒரு நாளில் மட்டும் சுடப்பட்ட துப்பாக்கிக் குண்டுகளுக்குச் செலவான தொகை அப்போதைய மதிப்பில் 4 இலட்சம் பவுண்கள். ஆக மற்ற செலவுகளையெல்லாம் கற்பனை செய்து பாருங்கள்.

**முதல் உலகப்போரின் நன்மைகளில் ஒன்று இரத்த வங்கிகள்.**

போரில் பலத்த காயமுற்ற வீரர்களுக்கு இரத்தம் செலுத்திச் சிகிச்சை அளிப்பதை பிரிட்டிஷ் இராணுவம் ஆரம்பித்து வைத்தது. ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு என்று நேரடியாகவே இரத்தப் பரிமாற்றம் செய்யப்பட்டது. அமெரிக்க மருத்துவர், ஆஸ்வால்ட் ராபர்ட்சன்தான் முதல் இரத்த வங்கியை நிறுவினார்.



இரத்தம் உறைவதையும் வீணாகப் போவதையும் தடுப்பதற்கு சோடியம் சைட்ரேட்டைப் பயன்படுத்தினார். ஐஸ் கட்டிகளின் அரவணைப்பில் 28 நாட்கள் வரை இரத்தம் பாதுகாக்கப்பட்டு, உயிர் காக்கும் நடவடிக்கைகளின்போது பயன்படுத்தப்பட்டன.

**கண்ணை ஏமாற்றிய கப்பல்கள்**

போரின்போது உணவையும் இராணுவத் தளவாடங்களையும் சுமந்துவந்த கப்பல்களை எதிரிகளின் நீர்மூழ்கி ஏவுகணைத் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பது அத்தியாவசியமாக இருந்தது. நார்மன் வில்கின்சன் என்ற ஓவியர் வித்தியாசமான ஒரு யோசனையை முன் வைத்தார். கண்ணைக் கூசவைப்பது போன்ற வடிவங்களாலும், ஒன்றுக்கொன்று தீவிரமாக வேறுபடும் வண்ணங்களாலும் கப்பலுக்கு ஒரு மாயத் தோற்றத்தைக் கொடுப்பது என்பதுதான் அவரது யோசனை. உருமறைப்பு என்பதற்கு நேரெதிர் இது. கண்ணைப் பறிக்கும் உருமறைப்பு என்று அதற்குப் பெயரிடலாம், கப்பல்களை மறைப்பதற்குப் பதிலாக எதிரிகளைக் குழப்புவதற்கு இந்த உத்தி பயன்பட்டது.

**காப்பாற்றிய குழிகள்**

முன்வரிசையில் நின்றுகொண்டு சுடுவது என்பது பிரிட்டிஷ் வீரர்களைப் பொறுத்தவரையில் அபூர்வமான ஒன்று. நீளமாகக் குழிகள் வெட்டி, அவற்றிலேயே அவர்கள் நடமாடினார்கள். இது பெரும்பாலும் ஆபத்தைத் தவிர்க்கத்தான்.

**போர்முனைக்குச் செல்ல இராணுவத் தளபதிகளுக்குத் தடை**

முதலாம் உலகப்போரைப் பற்றி வழக்கமாகச் சொல்லப்படும் உவமைகளுள் ஒன்று இது– கழுதைகளின் தலைமையில் சிங்கங்கள் போரிட்ட போர். போரில் நேரடியாகச் சண்டையிட்ட தளபதிகள் பெரும்பாலும் கொல்லப்பட்டதால் போர் முனைக்குச் செல்லத் தடைவிதிக்கப்பட்டது. தளபதி என்ற கௌரவத்தைப் போரில் ஏற்படும் வீர மரணத்துக்காக விட்டுக்கொடுக்கப் பலரும் தயாராக இல்லை என்றும் சொல்லலாம்.

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏனைய இனங்களை சிறுபான்மை இனங்களாக பார்க்கக் கூடாது

## பௌத்தர்களுக்கு நன்மை கிடைக்காது என்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

**நாட்டைத் தீ மூட்டி மக்கள் நன்மதிப்பை ஒருபோதும் பெற முடியாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**

ஸ்ரீலங்கா ராமான்ய நிக்காயவின் 69 ஆவது 'உப சம்பதா' நிகழ்வு நேற்று முன்தினம் மாத்தறை சனத் ஜய்சூரிய விளையாட்டரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஜனாதிபதி பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

நாட்டின் தீயை வெளிநாட்டுக்குக் கொண்டு சென்று வெளிநாட்டுத் தீயை நாட்டுக்குள் கொண்டு வந்து நாட்டைத் தீயிலாழ்த்தப் பலர் முயற்சிக்கின்றனர். மூன்று தசாப்தங்களாக ஓடிய இரத்த ஆற்றை நிறுத்தி நாம் பெற்றுக்கொண்ட இந்த சுதந்திரத்தை இல்லாதொழிக்க எவரும் செயற்படுவது தவறு எனவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை ஏனைய இனங்களை சிறுபான்மை இனமாகப் பார்த்து பௌத்தர்களுக்கு நன்மை கிட்டப்போவதில்லை என்பதே எனது நம்பிக்கை.

உலகிற்கு முன்னுதாரணமாக எமது பெறுமதிகளைப் பாதுகாக்க சிலர் முயற்சிக்கின்றபோது மோதல்களை உருவாக்கி இரத்தத்தை சூடேற்றும் வகையில் சிலர் சில சம்பவங்களை ஏற்படுத்துகின்றனர்.

சகவாழ்வே மதங்களைப் பாதுகாப்பதற்கு சிறந்தவழி என நான் நம்புகிறேன். மதங்களுக்கு மத்தியில் பிரச்சினைகளை உருவாக்கி நாட்டை சீர்குலைக்க சிலர் இக்காலங்களில் பெரும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். பௌத்தர்களின் பெயரை அபகீர்த்திக்கு உள்ளாக்கி வருகின்றனர். சிலர் இவற்றை இணையத்தளங்களில் வெளியிட்டு சர்வதேச நாடுகளுக்கு அனுப்பி பெரும் அழிவை ஏற்படுத்தப் பார்க்கின்றனர். இதன்மூலம் எவருக்கும் நன்மை கிட்டப்போவதில்லை.

ஏனைய இனங்களை சிறுபான்மை இனங்களாகப் பார்த்து பௌத்தர்களுக்கு நன்மை கிட்டப்போவதில்லையென்பதே எனது நம்பிக்கை. இதுபோன்று நாட்டை தீமூட்டி மக்கள் நன்மதிப்பை ஒருபோதும் பெறமுடியாது. மக்களின் நன்மதிப்பையும் நம்பிக்கையையும் வெல்வது எவ்வாறு என்பது பற்றி புத்தபெருமான் உபதேசம் செய்துள்ளார். பௌத்த சாசனத்தைப் போன்றே சமூகத்திற்காக உழைக்கின்ற அனைவருக்கும் இந்தப் போதனைகள் மிக முக்கியமானதாகும்.

நாட்டைக் கட்டியெழுப்ப ஒரு தரப்பினரால் மட்டும் முடியாது. சகல மக்களும் சகல மதத்தவரும் சகல இனத்தவரும் இணைந்து செயற்பட வேண்டும்.

சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் என அனைத்து மக்களும் ஒன்றிணைவதும் அனைத்து இன, மத மக்களினதும் நன்மதிப்பைப் பெறுவது முக்கியமாகும். மத சுதந்திரத்தை நாம் நாட்டில் ஏற்படுத்தியுள்ளோம். மூன்று தசாப்தங்களாக ஓடிய இரத்த ஆற்றை நிறுத்தி பெற்றுக் கொண்ட இந்த சுதந்திரத்தை இல்லாதொழிக்க எவரும் செயற்படுவது தவறு.

பரம்பரை பரம்பரையாகப் பாதுகாக்கப்பட்டுவந்த தர்மத்தை பாதுகாப்பது எம் அனைவரது பொறுப்பாகும். எமக்கு நல்ல உதாரணங்கள் உள்ளன. இவற்றை அடியொற்றி நாட்டுக்கும் மக்களுக்கும் சிறந்த தலைமைத்துவத்தை வழங்க மதத் தலைவர்கள் முன்வரவேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# அரசின் அனுசரணையின் கீழ் பொதுபல சேனா இயங்குகிறது

## ஜே.வி.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் நாட்டின் பிரச்சினைகளை மூடி மறைப்பதற்காக சில அமைப்புகளை பயன்படுத்துவதாகவும். கண்டியில் கார் பந்தயத்தை நடத்த வேண்டாம் என மாநாயக்க தேரர்கள் கோரிய போதும் அரசாங்கம் அதனை நிறுத்தவில்லை எனவும் ஜே.வி.பியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல பெலவத்தையிலுள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் அனுசரணையின் கீழ் பொதுபல சேனா இயங்கி வருகிறது. குறிப்பாக பாதுகாப்பு செயலாளர் மற்றும் பாதுகாப்பு பிரிவுகளில் உள்ள சிலரது ஆதரவு அந்த அமைப்புக்கு கிடைத்து வருகிறது.

அதேவேளை நாட்டின் சுகாதார சேவையில் பாரதூரமான நெருக்கடி உருவாகியுள்ளது. தாதி மற்றும் குடும்ப சுகாதார ஊழியர்கள் இடையிலான நிர்வாக ரீதியான பிரச்சினைகளை அரசாங்கம் தீர்த்து வைக்காததே இந்த நெருக்கடிக்கு காரணம்.

குருணாகல், பேராதனை வைத்தியசாலைகளில் பிரச்சினைகள் ஏற்பட்டதுடன் தற்போது ராகம வைத்தியசாலையில் இந்த பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

சுகாதார ஊழியர்கள் சுதந்திரமான மனநிலையில் தமது தொழிலில் ஈடுபட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அவர்கள் கடும் மன அழுத்தங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் நோயாளிகள் கடும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற முடியாத வறிய நோயாளிகளே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# சேனாக்கள் இணைந்து நாட்டை பிளக்க முயற்சி- அமைச்சர் ராஜித

(கொழும்பு)

புத்திசாலித்தனமான தலைவர்களாலேயே இனவாதத்தை இல்லாதொழிக்க முடியும் என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இனப்பற்று எனக் கூறிக்கொண்டவர்கள். அளுத்கம பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்களில் இருந்த பொருட்களை வெளியில் எடுத்தவர்கள். அவற்றை தமது வீடுகளுக்கு கொண்டு சென்றுள்ளனர். இது சமூகத்திற்குள் ஏற்பட்டுள்ள நோய்.

புத்திசாலிகளுக்கும். புத்திசாலித்தனமான தலைவர்களுக்குமே இந்த நோயை சமூகத்தில் இருந்து குணப்படுத்த முடியும்.

சிலர் தமது தனிப்பட்ட நோக்கங்களை இனவாத பிரச்சினையாக்க முயற்சித்து வருகின்றனர். அந்த சேனா, இந்த சேனா என்று பல பக்கங்களில் இருந்து சேனை உருவாகி வருகின்றது.

கடந்த காலங்களில் இந்த சேனாக்கள் எவரும் இருக்கவில்லை. சேனாக்கள் இணைந்து நாட்டை பிளவுப்படுத்த முயற்சித்து வருகின்றனர். அளுத்கம பிரதேசத்தில் இடம்பெற்ற அழிவுகளால் 2 ஆயிரம் மில்லியன் ரூபா வரை இழப்பு ஏற்பட்டுள்ளது. ஒரு மாத காலத்திற்குள் அரசாங்கம் இந்த அழிவு களை அரசாங்கம் சீர்செய்து கொடுக்கும். சிலரது புத்திசாலித்தனமற்ற செயல்களால் இந்த அழிவு ஏற்பட்டது.

52 பேர் சிறையில் உள்ளனர். அவர்களை பார்ப்பதற்கு கூட எவருமில்லை. பேருவளை பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட பொசன் தோரணத்தை கூட காட்சிப்படுத்த முடியாது போனது. சிலர் நன்றாக சாப்பிட்டு, ஆடைகளை அணிந்து மகிழ்ச்சியாக இருப்பதை பார்ப்பவர்கள் தாமும் அப்படி இருக்க முயற்சிப்பதில்லை. பொறாமைப்படுகின்றனர.

புத்த பகவான் வாழ்ந்த காலத்திலும் இப்படியான அழிவுகளை ஏற்படுத்தும் நபர்கள் இருந்தனர். நாம் சிலவற்றை புதிதாக நிர்மாணிக்கும் போது சிலர் அவற்றை உடைத்து பேரடுகின்றனர்.

கடைகளை உடைத்து அவற்றை வேடிக்கை பார்த்து மகிழ்ச்சியடைகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# இன்று ஒரு தகவல்

## பேசும் கணிப்பொறிகள்

ஒரு குடும்பத் தலைவர் வந்தார். மிகவும் சோகமாக இருந்தார்.

“எனக்கு குடும்பத் தலைவன் என்று பேர்தானே தவிர நான் கூப்பிட்ட குரலுக்கு “ஏன்?” என்று கேட்பதற்கு எங்கள் வீட்டிலே எவருமே தயாராக இல்லை என்று சொல்லி மிகவும் வருத்தப்பட்டார்.

அவருக்கு எங்கள் வீட்டிலே எவ்வளவு மரியாதை என்பதை நன்றாக புரிந்து கொண்டேன்.

வீட்டிற்கு வீடு வாசல்படி என்பது அவருக்கு தெரியவில்லை. அதனால்தான் அதிகமாக கலைப்படுகிறார்.

அவரை அமர வைத்து ஆறுதல் கூறினேன்.

“ இப்போது என்ன வேண்டும் உங்களுக்கு? கூப்பிட்ட குரலுக்கு “ஏன்” என்று கேட்க வேண்டும். நீங்கள் சொல்லும்படி கேட்டுக்கொள்கின்றேன்” என்றார்.

‘‘சற்று பொறுங்கள். அது மாதிரி ஒரு கணனி வரப்போகிறது. அதன் பின்னர் நீங்கள்தான் ராஜா! உங்கள் வார்த்தைக்கு அதன்பின்பு ஒரு தனிமரியாதை கிடைக்கப்போகிறது பாருங்களேன்’’ என்றேன்.

உண்மையாகவா? என்றார் மிகவும் ஆர்வமாக!

‘‘ஆமாம்!’’ என்று சொல்லிவிட்டு அதுபற்றி விபரங்களை அவருக்கு சொன்னேன்.

நீங்கள் அறிந்து வைத்துக் கொள்வது நல்லது. உங்களில் பலபேருக்கு இதுவொரு ஆறுதலான செய்தியாகும்.

அமெரிக்காவிலே வடகரோலினாவில் உள்ள பல்கலைக்கழகத்திலே உள்ள ஆராய்ச்சியாளர்கள் சிலபேர் இப்படியொரு கணனியை தயார் செய்துள்ளார்கள்.

குரல் மூலமாகவும் தொடுகை மூலமாகவும் இனம் கண்டு அதற்கு ஏற்ற மாதிரி இயங்கக்கூடிய கணனி முறை ஒன்றை கண்டுபிடித்துள்ளார்கள்.

அதிலே முக்கியமானது இந்த “குரல் தொடர்பு முறை” (Voice Interactive System) இதை சுருக்கமாக VIPS முறையென்று சொல்வார்கள்.

80 கட்டளைச் சொற்கள் அடங்கிய அட்டவணை ஒன்றை தயார் செய்துள்ளார்கள். அந்த அட்டவணையை கணனிக்கு அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள் .

அந்த வார்த்தைகளை நீங்கள் பயன்படுத்தி உத்தரவு பிறப்பிக்கலாம். உங்களின் உத்தரவு கேட்டு அதன்படி செயற்படும் அந்தக்கணனி.

அதாவது ஆங்கிலத்திலே ‘‘Now’’ என்று ஆரம்பித்து “Over” என்று முடிக்க வேண்டும். இந்த இரண்டு வார்த்தைக்கு நடுவிலே உங்கள் கட்டளையை பிறப்பித்து நிரப்பலாம்.

‘‘அதுசரி... நாங்கள் சொல்வதை அது எப்படி கேட்கிறது? அதற்கு காது இருக்கிறதா?’’ என்று கேட்காதீர்கள். அதிலே ஒரு மைக்ரோஃபோன் இருக்கிறது. அதிலே நீங்கள் கதைக்க வேண்டும்.

உங்கள் உத்தரவைக் கேட்டதும் அது செயற்பட ஆரம்பித்து விடும்.

நீங்கள் பேசும் வார்த்தைகளை கணனி நினைவிலே ஏற்கனவே பதிவு செய்து வைத்திருக்கும். வார்த்தைகளோடு இது ஒப்பிட்டுப்பார்க்கும். அதன்பின் உங்களின் உத்தரவு நிறைவேறும்.

இதைக் கேட்டவுடனே குடும்பத்தலைவருக்கு மிகவும் திருப்தி ஏற்பட்டது.

“விரைவில் வரட்டும் சேர் அந்தக் கணனி” என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நல்லூர் றோட்டறிக் கழகத்தின் இரண்டாவது பதவியேற்பு நிகழ்வில் மாவட்ட ஆளுநர் கௌரிராஜன், இந்திய துணைத் தூதரக அதிகாரி மேனன் உட்பட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் றோட்டரிக் கழகத்தின் இரண்டாவது தலைவராக ரவினதாஸ் பொறுப்பேற்பதையும் கழக அங்கத்தவர்கள் விருந்தினர்களுடன் காணப்படுவதையும் படங்களில் காணலாம்.







பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையின் பவள விழா அண்மையில் இடம்பெற்றபோது... (படங்கள் :- மானிப்பாய் செய்தியாளர்)

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் இடம் பெற்றது. இதில் விருந்தினர்களையும் பரிசில் வழங்கப்படுவதை யும் படங்களில் காண லாம். (படங்கள் :- மானிப்பாய் செய்தி யாளர்)

நிகழ்வின் நிழல்கள்




அ.யேசுராசாவின் திரையும் அரங்கும், கலைவெளியில் ஒரு பயணம், சு.ஸ்ரீதரனின் *ஸ்ரீதரன் கதைகள்* நூல்களின் அறிமுக நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது... (படங்கள் :- மானிப்பாய் செய்தியாளர்)





யாழ்ப்பாண பிரதேச அபிவிருத்தி வங்கிக்கிளையின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ் வில் பிரதம விருந்தினர் வங்கியின் மாவட்ட முகாமையாளர் ச.கீர்த்திசீலன் விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் சேமிப்பு கண க்கு ஆரம்பித்த பெண் ஒருவருக்கு மாவட்ட முகாமையாளர் சேமிப்பு சான்றிதழ் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர் களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- நல்லூர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் கந்தசுவாமி கோவில் புனராவர்த்தன அஷ்டபந்தன உத்தமோ உத்தம (33 குண்டம்) மஹா கும்பாபிஷேகப் பெருவிழா

## சிறப்பு மலர்-04.07.2014



இன்று காலை 8.00 மணி தொடக்கம் 11.00 மணிவரை கும்பாபிஷேக நிகழ்வை தமிழ் ஒளியின் அலைவரிசையான ஓம் ரீவியில் நேரடி ஒளிபரப்பு நிகழும்

**அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயில் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா (காலை 8.40 முதல் 10.27 மணிவரை) இன்றைய தினம் முப்பத்துமூன்று குண்ட மகாயாகம் காலை 8 மணிமுதல் இரவு 11.30 மணிவரை நடைபெறும். 05.07.2014 (சனிக்கிழமை) இரவு 7 மணிக்கு இந்தியாவில் புகழ்மிக்க அக்கினி இசைக்குழுவின் இன்னிசை கானம் இடம்பெறும். இலங்கை வரலாற்றில் முதன் முறையாக ஈழத்து இந்திய தவில், நாதஸ்வர கீழேயுள்ள கலைஞர்கள் ஒரே சமயத்தில் சங்கமிக்கும் தவில், நாதஸ்வர கச்சேரி இன்று கும்பாபிஷேக நிகழ்வின் போது இடம்பெறும்.**

(அ-7607)

### தர்மகர்த்தா சபைச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

சரித்திரப் புகழ்பெற்ற இணுவில் கந்தசுவாமி கோவில் மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். ஆலயங்களில் திருவருட் சக்தியை அதிகரிக்கச் செய்யும் நோக்குடனும் நித்திய, நைமித்திய கிரியைகளில் ஏற்படும் குறைகளை நிவர்த்திக்கும் பொருட்டும் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மஹாகும்பாபிஷேகம் செய்யவேண்டும் என ஆகமங்கள் வலியுறுத்துகின்றன.

கும்பாபிஷேகம் செய்தல்,செ ய்வித்தல் துணைபுரிதல்,கண்டு களித்தல் ஆகியன இறை புண்ணியத்தை நமக்கு ஈட்டித்தரும் சிறப்புடையன. ஆலயப் புனரமைப்பின்போது உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள அடியவர்கள் தமது நிதியை வாரிவழங்கி ஒத்துழைப்பு நல்கியுள்ளனர். மூர்த்தி,தலம், தீர்த்தம்,விருட்சச் சிறப்புகளையுடையதும் சைவப்பண்பாட்டின் சின்னமாக விளங்குவதுமான எமது கந்தன் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்புற நடைபெற்று கந்தப்பெருமானின் அருட்கடலில் மூழ்கும் பெரும்பாக்கியம் எம் அனைவருக்கும் கிடைத்துள்ளது.

எல்லாம் வல்ல கந்தப்பெருமானை வணங்கி வாழ்த்துகிறேன்.

செ.செல்வநாயகம்

### வாழ்த்துச் செய்தி

திருவருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோவில் மகா கும்பாபிஷேக சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.பன்னிரண்டு பேரூர்களில் ஒன்று அழகிய இணுவில் கிராமம். சைவமும் தமிழும் தெய்வீகக் கலையும் வளர்ந்தோங்கிய கிராமம் .சித்தர்கள், பக்தர், ஞானிகள் வாழ்ந்து வளம்பட்ட பூமி இது. இவ்வூர், கோவில்கள் பல நிரம்பப் பெற்றதும், உலகப் பெருமஞ்சத்தால் பெயர் பெற்றதுமான கிராமமாகும்.இத்தகைய சிறப்புக்கள் பொருத்தப்பெற்ற திருவூராம் இணுவில் மேற்கில் முருகப் பெருமான் கோயில் கொண்டுள்ளார். ஈழமணித்திருநாட்டில் பெயர் பெற்ற முருகனாலயங்களில் ஒன்றாகத் திகழ்வது இணுவில் கந்தப் பெருமான் கோவில் மீது இற்றைக்கு ஆறு நூற்றாண்டுகளுக்கு முன் பழைமை வாய்ந்த திருத்தலமாகும்.

பெரிய சந்நியாசியாரின் திருப்பணிகளாலும் வேறு பக்தர்களின் திருப்பணிகளாலும் வளர்ந்த கோவில் மூர்த்திவிஷேடம், தீர்த்த விஷேடம், தலவிஷேடம் பெற்றது. ஒரு காலத்தில் ஏழு குதிரைகள் பூட்டப்பெற்ற மஞ்சத்தில் முருகப் பெருமான் வீதியுலா வந்த காட்சியை எம்மூதாதை யர் கூறி மகிழ்வர். குளந்தொட்டுவளம் பெருக்கிய மன்னர்களால் கட்டப் பெற்ற ஸ்ரீபரராச சேகரன் ஸ்ரீ செகராசசேகரன் ஆலயங்கட்கு நடுவாக இக்கோவில் விளங்கியும் தென்னை, பலா, பருத்தி, மாஞ்சோலைகள் சூழ்ந்தும் மானும் மயிலும் விளையாடிய அழகினையுடையது. கால வெள்ளத்தில் குளம் மறைந்து விட்டது. இத்தகைய சூழலிலே பக்தர்கள் பணி செய்ய நாளும் வளர்ந்து அருள் பாலித்து அற்புதங்கள் செய்த முருகப் பெருமானது ஆலயம் பழுதடைந்து புதுப்பிக்க வேண்டிய தேவை வந்து விட்டது. பழுதடைந்த ஆலயக் கட்டுமானப் பணி களை அன்பர்கள் தொண்டர்கள் ஊரவர் உதவியோடு ஆலய நிர்வாக சபையினர் நிறைவு செய்துள்ளனர். மூன்று கோபுரங்களும் எழுந்து நிற்க அழகிய வர்ண வேலைப்பாடுகளுடனுன் தெய்வீக பொலிவுடனும் புதுப்பிக்கப்பட்ட ஆலயம் ஆனி உத்தரத்தில் குடமுழுக்கு வைபவத்துடன் இவ் விழா சிறக்க வாழ்த்துகின்றோம்.

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக்மெல்லாம்"

*வைத்திலிங்கம் தனகேசவன்,*
*கணக்காய்வாளர்.*


அன்பர்கள் அனைவரும் இன்று நடைபெறும் கும்பாபிஷேகத்தில் கலந்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மலரமைப்பு
சீ.ஞானேஸ்வரன்
Allionz Insurance
Agency Leader

PETTAH ESSENCE SUPPLIERS
104, Hospital Road, Jaffna.
Tel:-021 222 2386, 021 5670923
Maliban Biscuit Distributor
152, Hospital Road Jaffna.
TP:021 5670922

முருகன் மோட்டோர்ஸ்
ஆட்டோ, மோட்டார் சைக்கிள்
உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்
கே.கே.எஸ்.வீதி,
இணுவில் கோவில் வாசல்

கணேசன் ஸ்ரோர்ஸ்
சுபமுகூர்த்த பட்டு புடைவைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்
கோயில் தேவைகளுக்கான சகலவிதமான பொருட்களையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

இ.ச.பே.நாகரத்தினம் சக நிறுவனம்
E.S.P Nagaratnam & Co
அமெரிக்கன் தண்ணீர்
சைக்கிள் , சைக்கிள்
உதிரிப்பாகங்கள் மற்றும்
மின்சார சாதனங்கள்
52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே 021 222 3096,
021 221 7277

சரஸ்வதி ரேடிங்
19, 19A ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வளர்மதி ரெக்ஸ்ரைல்ஸ்
அனைத்து வகைப் புடைவைகளும் மொத்த,
சில்லறை விற்பனையாளர்களும் கோயில்
பட்டுக்குடைகள், கோயில் திரைச்சீலைகள்
தயாரிப்பாளர்களும் விற்பனையாளர்களும்.
258 (176), கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021222 3313

அரச அங்கீகாரம்
பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை
கிருபா லேணர்ஸ்
தலைமைக்காரியாலயம்
இல. 226,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி.
021 222 4353,
கிளை
A9வீதி,
வசந்தி திரையரங்கு
முன்பாக வவுனியா
024 222 7777,
077 7100444

ஸ்ரீ பிரவின்ஜா ஜீவலர்ஸ்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
T.P. 077 4849172
112, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

சாந்தி ரெக்ஸ்ரைல்
157,158 நவீன சந்தை
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel:-021 222 2045
கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில்
Tel:- 021 2241590

சிவசம்பு களஞ்சியம்
அபிஷேகப் பல்பொருள் வாணியம்
இல:03, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
ஆயுர்வேத மருந்துப் பொருட்கள்,
கோயில் அபிஷேகப் பொருட்கள்,
இந்திய பத்தி வகைகள்

ராஜன் ஒலி, ஒளி அமைப்பு
கற்பகுணை,
கந்தரோடை
சுன்னாகம்.
T.P:077 4722780


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கு எதுவுமே செய்யாமல் விமர்சிப்பதில் பயனேதுமில்லை

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



பாதிக்கப்பட்டு மீள் குடியேறி தற்போது அனைத்து துறைகளிலும் மீண்டுகொண்டிருக்கும் எமது மக்களுக்கு தம்மை அர்ப்பணித்து பணியாற்றியவர்களை எதனையுமே செய்யாது குறைகளை கூறிக் கொண்டும், விமர்சித்துக்கொண்டும் இருப்பதனையே தங்களது தொழிலாக கொண்டிருப்பவர்கள் மக்களுக்கான பணிகளை செய்து கொண்டிருப்பவர்களை விமர்சிப்பதற்கு எவ்வித தகுதியும் அற்றவர்கள் என பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மலையாளபுரம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அழைப்பின் பேரில் கிராமத்திற்கு சென்று பிரதேச மக்களையும் மக்கள் அமைப்பு பிரதிநிதகளையும் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் மீளக்குடியேறிக்கொண்டிருந்த காலம் தொடக்கம் அடிப்படை வசதிகள் குறைவாக இருந்த போதும் தம்மை அர்ப்பணித்த, பல அரச உத்தியோகத்தர்கள் எமது வழிகாட்டலில் மக்களுக்காக சிறப்புடன் பணியாற்றி வருகின்றனர்.

இவ்வாறு பல அரச உத்தியோகத்தர்கள் கடுமையான உழைப்பினை வெளிப்படுத்தியதன் காரணமாகவே ஒரு குறுகிய காலத்தில் எமது பிரதேசமும், மக்களின் வாழ்நிலையும் பெருமளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது.

இதனை மனசாட்சியுள்ள அனைவரும் ஏற்றுக்கொள்வர். கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்றத்தின் பின்னர் இதுவரைக்கும் 22 ஆயிரம் வீடுகள் வரை வழங்கப்பட்டுள்ளன.

இரண்டு மற்றும் ஒரு அங்கத்தவர்கள் உள்ளிட்ட சில குடும்பங்கள் வீட்டுத்திட்டத்திற்கு உள்வாங்கப்படாமைக்கு அரசாங்க அதிபரோ பிரதேச செயலாளரோ, எங்களை போன்ற பாராளுமன்ற உறுப்பினர்களோ காரணமல்ல.

மாறாக இது வீட்டுதிட்டங்களை வழங்குகின்ற இந்திய அரசு உள்ளிட்ட நிறுவனங்கள் கடைப்பிடிக்கின்ற விதிமுறைகள் அவர்களின் விதிமுறைகளுக்கு அமைவாக புள்ளியிடல் அடிப்படையில் வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

அவர்களின் விதிமுறைகளுக்கு அமைவாக பத்து புள்ளிகளுக்கு மேல் பெறுகின்ற அனைவரும் வீட்டுத்திட்ட பயனாளிகளாக தெரிவு செய்யப்படுகின்றனர். இந்த நிலையில் எவ்வித அடிப்படை அறிவும் அற்றவர்கள் போன்று அதிகாரிகள் மீது குற்றம் சுமத்துவது மடமைத்தனம்.

இந்த பிரதேசங்களில் உள்ளவர்களில் எங்களால் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டவர்கள், இங்கு நாம் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொண்ட அபிவிருத்திப் பணிகள் என்பன எங்களின் செயற்பாட்டுக்கு சாட்சியாக இன்றும் காணப்படுகின்றன.

இந்த பிரதேசத்தில் முன்னுரிமை அடிப்படையில் எம்மால் வழங்கப்பட்ட வேலை வாய்ப்பினை கூட தகுதியற்றவர்களுக்கு வழங்கப்பட்ட வேலைவாய்ப்புகள் எனக் கூறியவர்களே இன்று இந்த மக்களின் நலன்களை பற்றி பேசுகின்றனர். இது போன்ற விடயங்களில் மக்கள் எப்பொழுதும்விழிப்பாக இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

(முல்லைத்தீவு)

சுவிஸ் வித்தியாதீபம் முள்ளியவளை கிளையின் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு மு/ வித்தியானந்தாக் கல்லூரியில் வித்தியா தீபத் தலைவர் திருமதி திருமகள் தில்லை நடேசன் தலைமையில் நடைபெறவுள்ளதாக வித்தியா தீபச் செயலாளர் கமலநாதன் விஜிந்தன் அறிவித்துள்ளார்.

இப் பொதுக் கூட்டத்திலும் நிர்வாக சபைத் தெரிவிலும் மு/வித்தியானந்தாக் கல்லூரியின் பழைய மாணவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ)




## உதவியின்றி துன்பப்படுகிறேன்; பார்வையிழந்தவர் உருக்கம்

(கிளிநொச்சி)



எனது மருத்துவ செலவிற்கும் அன்றாட வாழ்க்கைக்கும் தேவையான உதவி இல்லாமல் மிகவும் துன்பப்படுவதாக கூறி இறுதியுத்தத்தில் இரண்டு கண்களையும் இழந்த நபர் ஒருவர் கடந்த சனிக்கிழமை அன்று கிளிநொச்சி சென்றிருந்த வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் மகஜர் ஒன்றை கையளித்தார்.

கிருஷ்ணபுரத்தை சேர்ந்த மேற்படி நபர் தனது மனைவியுடன் சம்பவ தினத்தன்று வருகை தந்திருந்தார். மீள் குடியேறிய பின்னர் இதுவரை ஐம்பது ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும் அப்பணத்தில் மிகவும் சிறிய கடை ஒன்றை நடத்தி வருவதனால் கிடைக்கும் சொற்ப வருமானத்திலேயே தாங்கள் சீவிப்பதாகவும் கூறினார்கள். கண்பார்வை இழந்த போது ஏற்பட்ட காயம் காரணமாக இவருக்கு வலிப்பு நோயும் அடிக்கடி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, இவரின் மருத்துவச் செலவிற்கு மிகவும் சிரமப்படுவதாகவும் தனது வீட்டில் தூர்ந்து போயுள்ள கிணறு மற்றும் ஏனைய திருத்த வேலைகளுக்கும் இதுவரையில் எவ்வித அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளும் கிடைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார். இவர்களது நிலைமையை உணர்ந்து கொண்ட முதலமைச்சர் மனம் வருந்தியதுடன் தன்னாலான உதவியை செய்து தருவதாகவும் உறுதியளித்துள்ளார். (அ-271)

# மீள்குடியமர்த்தக் கோரி கிளிநொச்சியில் இன்று முற்பகல் கவனயீர்ப்பு போராட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பரவிப்பாஞ்சான் உள்ளிட்ட பல இடங்களில் மீள்குடியேற்றம் இன்று வரை இடம்பெறாத நிலையில் மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்ற வலியுறுத்தியும் மக்களின் காணிகளிலிருந்து இராணுவத்தை உடனடியாக வெளியேற்றுமாறு வலியுறுத்தியும் இன்று வெள்ளிக்கிழமை 4 ஆம் திகதி முற்பகல் 11மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் தொடர்பாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அக்கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் இணைந்து விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யுத்தம் முடிவடைந்து ஐந்து ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் கிளிநொச்சியில் பரவிப்பாஞ்சான் உள்ளிட்ட பல பகுதிகளில் மக்களது வீடுகளையும் பொது நிலையங்களையும் இராணுவம் ஆக்கிரமித்து நிலை கொண்டுள்ளதால் இடம் பெயர்ந்துள்ள நூற்றுக்கணக்கான குடும்பங்கள் சொந்த வீடுகளுக்குத் திரும்ப முடியாதுள்ளன.

பல ஆண்டுகளாக உறவினர், நண்பர்கள் வீடுகளில் அகதிகளாக அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றனர். இம் மக்களின் மீள் குடியமர்வை வலியுறுத்தி கடந்த மே மாதம் 28 ஆம் திகதி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை பாதிக்கப்பட்ட மக்களுடன் இணைந்து நடத்தியிருந்தோம்.

எனினும் இன்றுவரை அம் மக்களின் மீள் குடியமர்வு தொடர்பாக எவ்விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் பரவிப்பாஞ்சான் உட்பட இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்குச் சொந்தமான காணிகள், வீடுகளில் ஆக்கிரமித்து நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் அங்கிருந்து உடனடியாக வெளியேறுவதுடன் அந்த வீடுகளையும் நிலங்களையும் உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோரியும் இது தொடர்பில் சர்வதேச சமூகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தியும் மீண்டும் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெறவுள் ளது.

இப்போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

# ஊழியர்கள் பிரச்சினையை தீர்க்க மூவர் கொண்ட குழு

## வடமாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு




(குருமன்காடு)

வவுனியா நகரசபையின் அட்டவணைப்படுத்தப்படாத ஊழியர்கள் தொடர்பான பிரச்சினையை எதிர்வரும் 11ஆம் திகதிக்குள் தீர்ப்பதுடன், இது தொடர்பான விசாரணைக்கு 3 பேர் கொண்ட குழுவை நியமிக்கவுள்ளதாகவும் வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா நகரசபைக்கு முன்பாக நகரசபை சுத்திகரிப்பு தொழிலாளர்கள் 3 ஆவது நாளாகவும் 12 அம்சக் கோரிக்கையை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுடன் நேற்று முன்தினம் புதன்கிழமை கலந்துரையாடிய போதே இவ்வாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா நகரசபைத் தொழிலாளர்களின் போராட்டம் காரணமாக நகரமே சுகாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளது. இப்பிரச்சினை தொடர்பாக முதலமைச்சருடன் க்தைத்துள்ளேன.

அவரின் அனுமதியுடனே மூன்று பேர் கொண்ட குழு விசாரணைக்காக நியமிக்கப்படுகிறது.

அந்தக் குழு எதிர்வரும் 10 நாட்களுக்குள் வவுனியா நகரசபை தொழிலாளர்களின் பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்.

அதன் பின்னர் உங்கள் நியாயமான பிரச்சினை தீர்க்கப்படும் எனத் தெரிவித்தார்.

இவ்விடயத்தை போராட்டத்திற்கு ஆதரவு வழங்கியிருந்த அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவருக்கு வட மாகாண சுகாதார அமைச்சர் கடிதம் மூலம் உறுதிப்படுத்தி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இப்போராட்டத்தை கைவிட்டு நகரின் அத்தியாவசிய கழிவகற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் போராட்டத்தில் ஈடுபட்ட வவுனியா நகரசபை சுத்திகரிப்பு தொழிலாளர்களிடம் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த நிலையில், மக்களின் நலனை கருத்தில் கொண்டும் அமைச்சரின் கோரிக்கைக்கு இணங்கவும் தினமும் 7 பேர் 3 மணித்தியாலங்கள் முக்கியமான இடங்களில் உள்ள கழிவுகளை அகற்றுவதாகவும் தமது பிரச்சினை தீர்க்கப்படும் வரை போராட்டம் தொடரும் எனவும் அரசாங்க பொது ஊழியர் சங்க வவுனியா இணைப்பாளர் ஆர்.சித்திரன் தெரிவித்தார். (அ-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் கைகளோடு உங்கள் மனமும் பரிசுத்த மாக இருக்கட்டும்!

– கிரிஸ் நாட்டுப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பழக்கடைகளை அகற்றும் முயற்சியில் யாழ். மாநகரசபை ஈடுபடுகின்றது

## பழக்கடை உரிமையாளர்கள் ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், மத்திய பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள பழக் கடை களை நிரந்தரமாக அகற்ற மாநகர சபை நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இதனால் அப் பகுதியில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் தமக்கு பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக பழக்கடை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வீதிக்கு காப்பெற்றிடவுள்ளதாகவும் எனவே பழக்கடை வியாபாரத்தை நிறுத்துவதோடு வீதிக்கு காப்பெற்றிட வசதியாக கடைகளுக்கு முன்பாகவுள்ள பழங்களை காட்சிப்படுத்தும் தளபாடங்களை அகற்றுமாறும் இரண்டு நாட்களுக்கு முன்பாக மாநகரசபை அறிவித்ததன் பிரகாரம் தாம் அவ் அறிவித்தல்களுக்கு அமைவாக செயற்பட்டதாகவும் ஆனால் தற்போது நிரந்தரமாக பழக்கடைகளை அகற்ற நடவடிக்கையினை மாநகரசபை எடுத்து வருவதாகவும் அவ்வாறான நடவடிக்கையில் மாநகரசபை ஈடுபட்டால் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடப் போவதாகவும் தெரிவித்தனர்.

யாழ் மத்திய பேருந்து நிலையத்திற்கும் வைரவர் கோவிலுக்குமிடையில் அமைந்துள்ள வீதியில் அதாவது பஸ் நிலையத்திற்கருகில் சுமார் 28 பழக்கடைகள் அமைக்கப்பட்டு இங்கு சுமார் 74 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இது தொடர்பாக பழக்கடை உரிமையாளர்கள் தெரிவிக்கையில், இந்தப் பகுதி வீதியை காப்பெற் வீதியாக மாற்றியமைக்க உள்ளதால் அங்குள்ள மேற்படி கடைகளின் முன்பக்கமாகவுள்ள சன்சயிற் பகுதிகளை அகற்றி நேற்றும், நேற்று முன்தினமும் கடைகளைப் பூட்டி ஒத்துழைப்பு வழங்குமாறு மாநகர சபையினால் அறிவிக்கபட்டிருந்தது.

இந்நிலையில் நேற்றுக் காலை இங்கு மாநகர சபையினர் கடைகளை நிரந்தரமாக அகற்றும் பொருட்டு கனரக வாகனங்களுடன் மற்றும் நிறைந்த வேலையாட்களுடனும் வந்தனர். இதன் போது அனைத்துக் கடைகளையும் அகற்றுமாறும் கோரினர்.

இதற்கு நாம் கடும் எதிர்ப்பை வெளியிட்டதுடன் வீதி போடுவதற்காக மாநகர சபையினால் விடுக்கப்பட்ட கோரிக்கையின் கடிதப் பிரதியையும் காட்டியிருந்த போதும் அதற்கு சம்மதிக்காத அதிகாரிகள் இதனை அகற்றுவதிலேயே பிரதானமாக இருந்தனர். அத்தோடு இதனை உரிய முறையில் தாம் அகற்றுவதாகவும் கூறிச் சென்றிருக்கின்றனர்.



இக்கடைகள் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் நீதிமன்ற உத்தரவுக்கு அமையவே மாநகர சபையினால் அமைத்துக் கொடுக்கப்பட்டது. இதற்குரிய பணத்தை நாம் செலுத்தி யதுடன் தற்போதும் வாடகைகளைத் செலுத்தியே வருகின்றோம்.

அத்தோடு மாநகர சபையினர் குறிப்பிடுவது போன்று வீதி போடப்படும் பகுதிகள் தவிர்ந்த மத்திய பேருந்து நிலையத்திற்குச் சொந்தமான குறிப்பிட்ட நிலப் பகுதியை உள்ளடக் கியதாகவே இக் கடைககள் அமைக்கப் பட்டிருக்கின்றது. இதனால் மாநகர சபையினர் வீதிகள் அமைப்பதற்கு இக்கடைகளை அகற்ற வேண்டிய அவசியமில்லை .

பெரும் கஷ்ட துன்பங்களுக்கு மத்தியிலும் நாளாந்த வாழ்க்கைக்காகவே இத் தொழிலை மேற்கொண்டு வருகின்ற நிலையில் மாநகர சபையின் இத்தகைய நடவடிக்கையினால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுளளதுடன் கொள்வனவு செய்யப்பட்டுள்ள பழங்கள் இருக்குமா என்றும் கேள்வி யெழுப்பியுள்ளனர். (அ-6)

## தட்டிக் கழிக்கும் கலாசாரம் அடியோடு வேரறுக்கப்பட வேண்டும்

நாட்டில் வெள்ள அனர்த்தம் ஒன்று ஏற்பட்டபோது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுமாறு இந்த நாட்டின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தியிருந்தார்.

அவ்வாறான அறிவுறுத்தலை அவர் விடுத்த போது கூடவே ஒரு விடயத்தையும் குறிப்பிட்டிருந்தார். அரச அதிகாரிகள் சுற்று நிருபங்களை இறுக்கமாகக் கடைப் பிடித்துக் கொண்டிருக்காமல், கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப பொதுமக்களுக்கு உதவ வேண்டும் என்பதே அவர் கூறிய விடயமாகும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறிய மேற்போந்த விடயம் மிகவும் முக்கியமானது. பொதுவில் அதிகாரிகள் சுற்று நிருபங்களைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு, சுற்றுநிருபப் புலமையாளர்களாக இருக்கின்றனரே தவிர, பொதுமக்களுக்கு உதவுவதற்கு சுற்று நிருபங்களை எங்ஙனம் பயன்படுத்தலாம் என்பது பற்றி இம்மியும் அவர்கள் கவனம் கொள்வதில்லை.

உண்மையில் சுற்று நிருபங்கள் அரச நிர்வாக செயற்பாடுகளை ஒழுங்குப்படுத்துவதற்கானது. அதற்காக சூறாவளி, சுனாமி, வெள்ளப் பெருக்கு என்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுகின்றபோது சுற்று நிருபத்தில் எங்காவது சுனாமி பற்றிக் கூறப்பட்டுள்ளதா? என்று யாராவது ஓர் அதிகாரி தேடுவாராயின் அவரே மனித இனத்தின் முதல் எதிரியாவார். எனவே சுற்று நிருபங்களை உதவியாகக் கொண்டு மக்களுக்கு சேவை செய்வதே முதல்பணியாகும்.

இருந்தும் சமகால சூழ்நிலையில் அதிகாரிகளில் பலர் தங்களின் கடமைகளைத் தட்டிக்கழிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர்.

பதவியில் இருக்கும் வரை தட்டிக் கழித்துக் காலம் கடத்துவது என்ற மனநிலை மக்கள் சமூகத்திற்குப் பெரும் தீங்கை ஏற்படுத்தும்.

இப்போதெல்லாம் மக்களின் பொருளாதார தேவைகள் பன்மடங்கு அதிகரித்து விட்டன. ஒரு காலத்தில் வீட்டுச் சூழலிலேயே வீட்டுவருமானம் ஈட்டப்பட்டது. ஆனால் அந்தக் காலம் மலையேறி போய், இப்போது பகல் இரவாக உழைத்தாலும் சீவியத்தைப் போக்குவது கடினம் என்பதாக நிலைமை மாறிற்று.

நிலைமை இதுவாக இருக்கும் போது அரச திணைக்களங்கள் மற்றும் அரச் அமைப்புகளை நோக்கி மக்கள் தங்கள் தேவை நிமிர்த்தம் செல்கையில் அத் தேவைகள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும்.

குறித்த தேவையை நிறைவேற்றிக்கொள்ள பல தடவைகள் மக்கள் அலுவலகங்களுக்கு அலைவார்களாயின் அதனால் அவர்களின் பொருளாதாரம் பாதிப்படையும். மன உளைச்சல் ஏற்படும்.

இது தவிர பொதுமக்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான வசதிகளும் வாய்ப்புகளும் செய்து கொடுக்கப்படுவதும் அவசியம்.

ஆனால் சில இடங்களில் அது பற்றிய கவனிப்புகள் அறவே இல்லையெனலாம். யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் நோயாளர்களைப் பார்வையிடுவதற்குப் பாஸ் நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளது.

நோயாளர்களின் நலன் கருதி அப்படியொரு முடிவை வைத்தியசாலை நிர்வாகம் எடுத்திருக்கலாம். நல்லவிடயம். ஆனால் அதேசமயம் பார்வையாளர்கள் தகிக்கும் வெயிலில் காய்ந்து காத்து நிற்கும் பரிதாபம் குறித்து யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்காதது ஏன்? பார்வையாளர்கள் தங்கியிருக்கக் கூடிய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் அல்லவா?

யாழ்.நகர வீதிகளில் யாழ்.அரச அதிபர் முதல் அத்தனை உயர் அதிகாரிகளும் சென்று வருகின்றனர். ஆனால் சுட்டெரிக்கும் வெயிலில் பார்வையாளர்கள் களைத்து நிற்பது இன்னமும் அவர்கள் கண்களுக்குத் தெரியவில்லை. இங்குதான் இடியமீனின் நிர்வாகக் குணம் எங்களிடம் இருப்பது தெரிகிறது.

ஆக தட்டிக்கழித்தல், பொதுமக்களின் நலன் பற்றி கவனம் செலுத்தாமை என்ற கொடுங் கலாசாரம் நிர்வாகப் பணிகளிலிருந்து முழுமையாக வேரறுக்கப்பட வேண்டும்.

## அகதிப் படகை திருப்பியனுப்பியமையை கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இலங்கை அகதிகள் புகலிடம் கோரி அவுஸ்திரேலியாவுக்கு படகில் வந்த காரணத்தினால் அவர்களை நடுக்கடலில் வைத்து பெரிய அதிவேக படகுகள் மூலம் இலங்கைக்கு திருப்பி அனுப்பியதை கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றினை அகதிகளுக் காக செயற்படும் அமைப்பான [ Refugee Action Coalition Sydney] ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கை அரசாங்கம் தமிழர்களுக்கான சமவுரிமை மற்றும் அவர்களுடைய பிரச்சினைகளுக்கான தீர்வுகள் இதுவரைக்கும் வழங்கப்படவில்லை.

தற்போதும் கடத்தல்கள் புலனாய்வு விசாரணைகள் என தமிழர்களுக்கு சரியான முறையில் இலங்கையில் பாதுகாப்பு இல்லை. அதனால் தங்களது உயிரை பாதுகாக்கவே நாடு நாடாக இடம்பெயர்கின்றனர்.

அது மட்டுமன்றி இலங்கையில் வாழ்வதற்க்கான உரிமை மறுக்கப்பட்டதால்தான் அவர்கள் இந்தியாவுக்கு அகதிகளாக சென்றிருந்தார்கள்.

இந்தியாவில் இருந்து வந்தவர்களை மீண்டும் இலங்கை அரசிடம் ஒப்படைப்பது மாபெரும் தவறு என தெரிவித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டமானது எதிர்வரும் 7 ஆம் திகதி சிட்னியில் உள்ள குடிவரவு அலுவலகத்துக்கு முன்னால் நன்பகல் 12 மணியளவில் இடம்பெறவுள்ளதென தெரிவித்தார். (2)

## சிந்மய பாரதியில் ‘பெருவிழா’

(மானிப்பாய்)

சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தின் 130ஆவது அகவையை வரவேற்கும் பெருவிழா மற்றும் “சிந்மயம்”சிறப்புமலர் வெளியீடு ஆகிய நிகழ்வுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பி.ப 3.00 மணிக்கு அதிபர் ஆ.பேரின்பநாயகம் தலைமையில் பாடசாலையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவும், சிறப்பு விருந்தினராக வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரனும், மற்றும் விருந்தினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

புகழ்பூத்த கல்வியாளர்கள் பலரை உருவாக்கிய இப்பாடசாலைக்கு மேலும புதிய உத்வேகத்தைக் அளிக்கும் வகையில் மேற்படி நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பாடசாலை பழைய மாணவர் சங்கம் அறிவித்துள்ளது.(செ)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலையின் குமாரசுவாமி மண்டபத்தில் பாடசாலை அதிபர் வீ.கணேசராசா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இராஜசிங்கம் விக்னேஸ்வரன், திருமதி செந்தூர்ச்செல்வி விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள். (2)

▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲

(யாழ்ப்பாணம்)

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு பாடசாலை அதிபர் எஸ்.சிவனேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத் துறை தலைவர் ப.புஷ்பரட்ணம் கலந்து கொண்டு சிறப்பிப்பார்.

சிறப்பு விருந்தினராக பழைய மாணவரும் பேராசிரியருமான என்.இரவீந்திரன், கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவானந்தராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள். (2)

### அமைதியின் சொற்கள்

எல்லோருக்கும் கனவுகள் உள்ளன. அதிர்ஷ்டவசமாக அந்தக் கனவுகளையும் விட நிஜம் அழகானது. நீ எதைத் தேடுகின்றாயோ அது உன் உள்ளே இருக்கின்றது.

அழியாப் பொருள், அமைதி உன் உள்ளேயே இருக்கின்றது எனக் காலம்காலமாக ஒரு குரல் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

*(பிரேம் ராவதி)*

### இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

#### அன்புடன் வாழ்வோம்

★ மனிதர்கள் செய்த உதவியை சிந்திப்பதை விட இறைவன் செய்த உதவியை சிந்தனை செய்வீர்!

★ நீங்கள் செய்த நன்மைகளை சிந்திப்பதை விட உங்களில் நிகழ்ந்த பாவங்களைச் சிந்தியுங்கள்.

★ மற்றவர்களின் குற்றங்களை நோட்டமிடுவதை விட உங்களின் குற்றங்களை நோட்டமிடுங்கள்.

★ உன் வாயிலாக இறைவன் ஒரு மனிதனுக்கு நேர்வழி காட்டுவது, இவ்வுலகத்தையும் இதிலுள்ள யாவற்றையும் விட உனக்கு நன்மை பயப்பதாகும்.

★ எவர் அண்டை வீட்டாரை துன்புறுத்துகிறாரோ, அவர் என்னைத் துன்புறுத்தியவராவார்.

★ அன்பு செலுத்தாதவன் அன்பு செலுத்தப்படுவதற்கு அருகதை அற்றவன்.

★ தருமம் செய்ய இயலாதவன் ஒரு நற்செயல் செய்வானாக அல்லது ஒரு கெட்ட செயலிலிருந்து விலகிக் கொள்வானாக. அதுவே அவனது ஈகை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# தாவடி காளியம்பாள் வி.கழகம் நடத்திய தாச்சி சுற்றுப் போட்டி

## ஆலடி சிந்து விளையாட்டுக் கழகம் சம்பியன்









தாவடி காளியம்பாள் விளை யாட்டுக் கழகம் நடத்திய தாச்சி சுற் றுப் போட்டியில் ஆலடி சிந்து விளை யாட்டுக் கழகம் வெற்றி பெற்று சம் பியனாகியது.

தாவடி காளியம்பாள் விளையா ட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் ஆலடி சிந்து அணியும் மயிலிட்டி வள்ளுவர் அணியும் மோதியது.

முன்னதாக இடம்பெற்ற அரை யிறுதிப் போட்டிகளின் படி ஆலடி சிந்து அணியும் புதுமடம் வைகறை அணியும் மோதிய முதலாவது அரை யிறுதியில் ஆலடி சிந்து 5 பழங்களைப் பெற பதிலுக்கு புதுமடம் வைகறை 4 பழங்களையே பெற்றது.

இதனால் இப் போட்டியில் ஆலடி சிந்து 5:4 என்ற அடிப்படையில் வென்று இறுதிப் போட்டிக்கு முன் னேறியது.

மயிலிட்டி வள்ளுவர் அணியும் மயி லிட்டி கண்ணகி அணியும் மோதிய இரண்டாவது அரையிறுதியில் மயிலி ட்டி வள்ளுவர் 15 பழங்களைப் பெற பதிலுக்கு மயிலிட்டி கண்ணகி 3 பழங்களையே பெற்றது.

இதனால் இப் போட்டியில் மயிலி ட்டி வள்ளுவர் 15:3 என்ற அடிப் படையில் வென்று இறுதிப் போட்டி க்கு முன்னேறியது.

இறுதிப் போட்டி ஆரம்பித்து சிறிது நேரத்தில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக அணி அடுத்தடுத்து 2 பழங் களைப் பெற்றது.

பதிலுக்கு மயிலிட்டி வள்ளுவர் அணி பழமொன்றினைப் பெற்றது.

எனினும் சுதாகரித்த ஆலடி சிந்து விளையாட்டுக் கழக அணி தொடர்ச்சி யாக பழங்களைப் பெற்றது.

இதன் அடிப்படையில் ஆட்டத்தின் முதல் பாதியில் 5:2 என முன்னிலை வகித்த ஆலடி சிந்து விளையாட்டுக் கழகம் போட்டி நிறைவில் 8:3 பழங்கள் என்னும் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனகியது.

இரண்டாம் இடத்தை மயிலிட்டி வள்ளுவர் அணி பெற்றது. 3 ஆம் இடத்தை உடுவில் வைகறை அணி யும். 4 ஆம் இடத்தை மயிலிட்டி கண் ணகி அணியும் பெற்றன.

போட்டியின் ஆட்டநாயகனாக மயிலிட்டி வள்ளுவர் அணியின் விம லும். ஆலடி சிந்து விளையாட்டுக் கழக அணியின் பிரபாவும் தெரிவானார் கள். அத்துடன் வளர்ந்து வரும் வீர னுக்கான விருது மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழக வீரனான செல்லா விற்கு வழங்கபட்டது.

இவர்களிற்கான பரிசில்களையும் வெற்றிக்கிண்ணங்களையும் வட மாகாண சபை உறுப்பினரும் வடக்கு மாகாண விளையாட்டு அமைச்சின் இணைப்பாளருமான இ.ஆனல்ட். பல்கலைக்கழக உடற்கல்வித்துறை விரிவுரையாளர் இளம்பிறையன். உடு வில் பிரதேச சபையின் உபதவிசா ளர் பரமேஸ்வரலிங்கம். யாழ்.மாவட்ட தாச்சி சங்க தலைவர் சண்முகலிங்கம் ஆகியோர் வழங்கி வைத்தனர்.(க-23)

# வடக்கு, தெற்கு அணிகளுக்கிடையிலான எல்லே போட்டி நாளை ஆரம்பம்

யாழ். மாவட்ட கட்டளைத் தலை மையகத்தின் ஏற்பாட்டில் எல்லே விளையாட்டை ஊக்குவிக்கும் முக மாக இம்மாதம் 5, 6 ஆம் திகதிக ளில் வடக்கு மற்றும் தெற்கு எல்லே அணிகளுக்கு இடையில் போட்டிகள் நடைபெறவுள்ளதாக கட்டளைத் தலைமையகத்தின் உயரதிகாரி வீரமன் தெரிவித்தார்.

எல்லே போட்டி தொடர்பிலான ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று நேற்றுமுன்தினம் தல்செவன விருந் தினர் விடுதியில் நடைபெற்றது. அதன்போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

வடக்கு மற்றும் தெற்கு எல்லே அணிகளுக்கு இடையில் எதிர்வரும் 5. 6ஆம் திகதிகளில் யாழ். மாவட்ட த்தில் எல்லே போட்டி நடை பெறுவ தற்கான ஏற்பாடுகளை பலாலி கட்ட ளைத் தலைமையகம் மேற் கொண் டுள்ளது.


அதன்படி யாழ்ப்பாணத்தில் இரு ந்து 3 ஆண்கள் அணியும் 4 பெண்கள் அணியும். முப்படைகளில் இருந்து 6 ஆண்கள் அணியும் ஒரு பெண்கள் அணியும். பொலிஸார் அணி ஒன்றும் விளையாடவுள்ளன.

அதுபோல தெற்கில் இருந்து 13 ஆண்கள் அணியும் 3 பெண்கள் அணியும் விளையாடவுள்ளன. எனவே குறித்த விளையாட்டு துரையப்பா விளையாட்டு அரங்கு. யாழ். இந்துக் கல்லூரி. யாழ் . மத்திய கல்லூரி மற்றும் பலாலி இராணுவ தலை மையக மைதானம் ஆகிய இடங்க ளில் நடைபெறவுள்ளன.

முதல்நாள் நிகழ்வுகள் எதிர்வரும் 5 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 8.45 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இதனை யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி உதயப் பெரேரா ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

மேலும் இறுதிநாளான 6 ஆம் திகதிக்கான போட்டிகள் பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகும்.இந்த நிகழ் விற்கு இலங்கையின் இராணுவத் தளபதி தயாரட்நாயக்கா அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார். (க-6)

# வடமாகாண கராத்தே போட்டி; கைதடி நவீல்ட் மாணவர்கள் சாதனை




வடமாகாண பாடசாலைகளுக் கிடையிலான கராத்தே சுற்றுப் போட்டி அண்மையில் வவுனியா சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் கைதடி நவீல்ட் விழிப்புலன். செவிப்புலன் இழந்த மாணவர்கள் 7 தங்கம். 3 வெள்ளி. 3 வெண்கலப்பதக்கங்கள் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

மற்றும் இம்முறை நடைபெறும் தேசிய மட்ட கராத்தே போட்டிக்கும் இம் மாணவர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

வடமாகாண மாகாணக்கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப்பணிப்பா ளர் க.சத்தியபாலன். கராத்தே பெற்றுப் பாசிரியர் பவிராஜ். கராத்தே நடுவர் கள். கராத்தே பயிற்சி ஆசிரியர் சென்சே விஜயராஜ் மற்றும் தங்கப் பதக்கம் பெற்ற மாணவர்கள் ஆகி யோரை படத்தில் காணலாம். (க)

# டிறிபேக் தாரகை வெற்றி



சாவகச்சேரி டிறிபேக் தாரகை மற்றும் திருநெல்வேலி YMHA அணிகள் மோதிக்கொண்ட சிநேக பூர்வ 50 பந்துப் பரிமாற்றம் கொண்ட கிரிக்கெட் போட்டி கடந்த சனிக்கிழமை மானிப்பாய் இந்து கல்லூரி மைதா னத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சி யில் வெற்றி பெற்று முதலில் துடுப் பெடுத்தாடிய டிறிபேக் தாரகைஅணி நிலானின் அரைச்சதத்தின் உதவி யுடன் 49 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 247 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் நிலான் 50. பிரதாபன் 35. தர்ஷன் 31. ஹரிகரன் 29. சுரேஷ் 24 ஓட்டங்களைப் பெற் றுக் கொடுத்தனர். YMHA அணி சார்பாக பந்து வீச்சில் [illegible] 47 ஓட்டங்களை கொடுத்து 3 இலக்கு களை கைப்பற்றினர்.

பதிலளித்து ஆடிய திருநெல்வேலி YMHA அணி 207 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 40 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது. YMHA அணிசார்பாக தேசிகன் 43 ஓட்டங்களையும் தினேஷ 28 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்த னர். பந்து வீச்சில் பிரவின் 37 ஓட்டங் களை கொடுத்து 4 இலக்கினையும் [illegible] 32 ஓட்டங்களை கொடுத்து 3 இலக் கினையும் கைப்பற்றினர். (க-29)

# 36 ஆண்டுகால சாதனையை தகர்த்த கோல் கீப்பர் ஹோவர்ட்



ரவுண்ட்-16 சுற்றின் கடைசி போட் டியில் அமெரிக்க அணியின் கோல் கீப்பர் டிம் ஹோவர்ட் 16 முறை பந்தை கோல் விழ விடாமல் தடுத்து சாதனை படைத்துள்ளார்.

இந்தப் போட்டியில் அமெரிக்க அணியை 2:1 என்ற கோல் கணக்கில் பெல்ஜியம் வீழ்த்தியது. இதனால் அமெரிக்க அணி உலகக்கிண்ண த்தில் இருந்து வெளியேறியது.

அதே சமயம் அமெரிக்க அணி யின் கோல் கீப்பர் புதிய சாதனையை படைத்தார். பெல்ஜியம் அணியுட னான போட்டியில் அமெரிக்க கோல் கம்பத்தை நோக்கி 38 ஷாட்டுகள் அடிக்கப்பட்டன.

அதில் 2 கோல்கள் ஆகின. 16 முறை பந்தை. கோல் கீப்பர் டிம் ஹோவர்ட் அபாரமாக தடுத்து நிறுத் தினார்.

இதற்கு முன்பு 1978 ஆம் ஆணடு. பெரு நாட்டு கால்பந்தாட்ட அணியின் கோல் கீப்பர் ரமோன் குயிரோகா 13 முறை பந்தை தடுத்து சாதனை நிகழ்த்தியிருந்தார்.

16 முறை கோல் விழுவதில் இருந்த ஹோவர்ட் தடுத்ததால் ரமோனின் 36 ஆண்டுகால சாத னையை முறியடிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விம்பிள்டன் டென்னிஸ் தொடர் இறுதி போட்டிக்கு பெட்ரா தகுதி

2011-ம் ஆண்டு சாம்பியன் பட்டம் வென்றவரும், 6-ம் நிலை வீராங்கனையுமான பெட்ரா குவிடோவா (செக்குடியரசு) மகளிர் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இருந்தே சக நாட்டு வீராங்கனைளுடன் விளையாட நேர்ந்தது.

காலிறுதிக்கு முந்தைய சுற்றில் பெங்கையும், காலிறுதியில் பார்பராவையும் வீழ்த்திய அவர் நேற்ற நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் தனது நெருங்கிய தோழியான சபரோவாவை எதிர்கொண்டார்.

இதில் 7:6 (8), 6:1 என்ற செட்கணக்கில் வெற்றிபெற்ற குவிட்டோவா இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

இதேவேளை நாளை சனிக்கிழமை நடைபெற உள்ள இறுதிப் போட்டியில் இவர் ரோமானியாவின் ஹாலெப் அல்லது கனடா நாட்டின பவுச்சர்டை எதிர்கொள்ள வேண்டும். (க)


# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் வாடகைக்கு வீடு / கட்டம் தேவை

அறிவியல்நகர் கிளிநொச்சியில் உள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாயபீட மாணவர்களிற்கு விடுதி வசதி வழங்குவதற்காக சகல வசதிகளுடனும் கூடிய பெரிய, நடுத்தர வீடுகள் / கட்டடங்கள் திருமுருகண்டி வீதியை / கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதிகளில் வாடகைக்கு தேவை.

வீட்டை கட்டடத்தை வாடகைக்குத்தர விரும்புவோர் கீழ்வரும் மாதிரிப்படிவத்தில் தயார் செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 23.07.2014 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன்னர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / நிர்வாகக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பவும். கடித உறையின் இடது மேல் மூலையில் 'யாழ். பல்கலைக்கழக விவசாயபீட மாணவர்களுக்கான வீடு / கட்டடம்' என குறிப்பிடப்பட வேண்டும். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

○ தொடர்புகளுக்கான தொலைபேசி இல : 021 222 6517

பதிவாளர்

சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / நிர்வாகம்
யாழ். பல்கலைக்கழகம்.

**யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாயபீட மாணவர்களின் உபயோகத்திற்கான வீடு / கட்டடம்**

மேற்படி விடயம் தொடர்பாக தங்கள் ............................................ ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்திற்கு அமைவாக எனது பின்வரும் வீட்டை / கட்டடத்தை பல்கலைக்கழகத்திற்கு குத்தகைக்குத்தர விரும்புகின்றேன்.

**வீடு / கட்டடம் பற்றிய விபரங்கள்**

1. வீடு / கட்டடம் அமைந்திருக்கும் இடம்
..............................................................
..............................................................
..............................................................

2. வீடு / கட்டட சொந்தக்காரரின் பெயரும் அவரது நிரந்தர முகவரியும்
..............................................................
..............................................................
..............................................................

3. தொடர்பு கொள்ள வேண்டிய பெயரும் முகவரியும் தொலைபேசி இலக்கமும்

பெயர் : ..............................................................

முகவரி : ..............................................................
..............................................................

தொலை பேசி இல: ..............................................................

4. (a) வீட்டின் / கட்டடத்தின் பரப்பளவு (சதுர அடி) ....................
(b) வீடு / கட்டடம் அமைந்துள்ள காணியின் பரப்பளவு ....................

5. அறைகளின் எண்ணிக்கை ....................
குளியல் அறைகளின் எண்ணிக்கை ....................
மலசல கூடங்களின் எண்ணிக்கை ....................

6. மின்சார வசதி உண்டு / இல்லை ....................
விபரம் ....................

7. தண்ணீர் வசதி : கிணறு / குழாய் நீர்
விபரம் ....................

8. எதிர்பார்க்கும் குத்தகை / மாதாந்த வாடகை ....................
(வீடு / கட்டட பராமரிப்பு தொடர்பான செலவுகள் உள்ளடங்கலாக)

9. குத்தகைக்கு தரக் கூடிய கால அளவு ....................

10. வேறு யாதாயினும் கட்டுப்பாடுகள் / நிபந்தனைகள் (இருப்பின்) ....................
..............................................................
..............................................................

..............................................................

திகதி : .................................... விண்ணப்பதாரின் கையொப்பம்

(C-7809)


## ஜனாதிபதிக்...

மேலதிகமாக இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் ஜனாதிபதியின் இந்த வருடத்திற்கான மொத்த செலவு 891 கோடியே 56 லட்சத்து 34 ஆயிரத்து 210 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

நிதியமைச்சு வெளியிட்டுள்ள வருட மத்தியிலான அரசாங்கத்தின் நிதி நிலைமை தொடர்பான அறிக்கையில் இந்த தகவல் தெரிய வந்துள்ளது.

வரவு செலவுத் திட்டத்தின் ஒதுக்கப்பட்ட நிதிக்கு அமைய ஜனாதிபதியின் ஒரு நாள் செலவு 2 கோடியே 34 லட்சத்து 77 ஆயிரத்து 178 ரூபாய் என்ற போதிலும் தற்போது அது 2 கோடியே 44 லட்சத்து 26 ஆயிரத்து 395 ரூபாயாக அதிகரித்துள்ளது. (செ-11)

## கச்சதீவு தொட...

வெளியிட்டுள்ளது.

இலங்கை விவகாரம் தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சின் துணைச் செயலாளர் மாயங்க் ஜோஷியின் கையொப்பத்துடன் மத்திய வெளிவிவகார அமைச்சின் பதில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இரண்டு நாடுகளுக்கும் இடையிலான கடல் எல்லை தொடர்பில் மாத்திரமே ஒப்பந்தம் இருப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த ஒப்பந்தத்தில் இருநாடுகளினதும் முத்திரையோ, நாடாளுமன்ற முத்திரையோ அல்லது அரச அதிகாரிகளின் கையெழுத்தோ இருக்கவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மத்திய வெளிவிவகார அமைச்சின் இந்தத் தகவலுக்கு அமைய மீனவ அமைப்புக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-11)

## தமிழகத்தில்...

குறித்த உறுதியான தகவல்கள் கிடைக்க மேலும் பொறுத்திருக்கவேண்டும்.

ஜூன்மாதம் 18-ம் தேதி வாக்கில் இந்த முகாமகளில் இருந்தவர்களுக்கு செய்மதித் தொலைபேசி மூலம் அழைப்பு வந்ததாக அவர்களின் குடும்பத்தினர் தெரிவித் ததை வைத்துப் பார்க்கும் போது, இந்த அழைப்பு கடலில் இருந்து வந்திருக்கலாம் என்று எண்ணத்தோன்றுவதாக சந்திரகாசன் கூறினார்.

இந்தியாவில் வாழும் இலங்கைத் தமிழ் அகதிகள் பாதுகாப்பாக வாழ்ந்து வரும் நிலையில், இது போன்ற உயிராபத்தைத் தோற்றுவிக்கும் படகுப் பயணங்களை மேற்கொள்வதைத் தவிர்க்குமாறு தமது அமைப்பு அவர்களுக்கு வலியுறுத்திவருவதாகவும் அவர் கூறினார். (செ-11)

## யாழ்.பல்கலை...

வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எவர் என்ன கூறினாலும் இலங்கையின் இரண்டாவது தனியார் மருத்துவக் கல்லூரி கண்டியில் ஆரம்பிக்கப்படும்.

தென் கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு பொறியியல் பீடமும், பேராதனை பல்கலைக்கழகத்திற்கு முகாமைத்துவ பீடமும் பெற்றுக் கொடுக்கப்படும்.

இதனை தவிர ஸ்ரீ ஜயவர்தனபுர மற்றும களனி பல்கலைக்கழகங்களுக்கு இரண்டு பொறியியல் பீடங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

அத்துடன் யாழ்ப்பாணம் மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகங்களுக்கு இரண்டு மருத்துவ பீடங்கள் புதிதாக பெற்றுக்கொடுக்கப்படும் எனவும் எஸ்.பி.திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (செ-11)


**வேலைவாய்ப்பு**

வைத்தீஸ்வரன் நோயாளர் பராமரிப்பு சேவைக்கு ஊழியர்கள் தேவை. தகுதியான (ஆண்,பெண்) இருபாலாரும் பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கங்கள் : 0774744204, 0770740351

(6829)



**இலங்கை நிர்வாக சேவை (SLAS)**

போட்டிப் பரீட்சை விசேட வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

ஒவ்வொரு சனியும் 8.30-3.30 மணி வரை நடைபெறும்.


விரிவுரையாளர்கள்:- P.உமாசங்கர் P.கமல்தாசன்

**நாவலர் கல்வி நிலையம்**
ஆனைப்பந்தி, யாழ்.நகர்
தொ.பே:-0774696695

(C-7812)


# மரண அறிவித்தல்

## கார்த்திகேசு கந்தையா (மேஸ்திரி)



நாவலர் வீதி, நாவாந்துறையை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட கார்த்திகேசு கந்தையா 03.07.2014 நேற்று வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு நாகம்மா ஆகியோரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற மரியம்மாவின் அன்புக் கணவரும் சீலி, அமரர் மாலா, மலர், தவம், வாணி, பாலன், செல்வி, அமரர் செல்வன், அமரர் கமலன், உதயன் ஆகியோரின் அன்புத்தந்தையாரும் ஆவார். அன்னாரின் இறுதி நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை (04.07.2014) பிற்பகல் 3.00 மணியளவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியுடன் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளப்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 7, நாவலர் வீதி,
நாவாந்துறை.

தகவல் :
குடும்பத்தினர்.

(6833)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பீரிஸ்...

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் உள்ளிட்ட பல இராஜதந்திரிகளை சந்திக்க உள்ளார்.

மீனவர் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்றுக் கொண்டதன் பின்னர், பீரிஸ் மேற்கொள்ளும் இரண்டாவது விஜயம் இதுவாகும்.

பதவிப் பிரமாண நிகழ்வுகளின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பீரிஸ் இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்தார என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## தியாக...

அப்பகுதியில் பாதுகாப்பு தரப்பினர் துருவித் துருவி தேடுதல் நடத்தியுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதேவேளை தியாகி திலீபனின் உடல் வெள்ள முள்ளிவாய்க்காலில் பாதுகாக்கப்பட்டு வருவதாக தமக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாக பாதுகாப்பு பிரிவும் தெரிவித்துள்ளது.

திலீபனின் உடல் பாதுகாப்பாக புதைக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் கிடைத்ததையடுத்து புதைக்கப்பட்ட இடத்தை தேடி கொழும்பு பயங்கரவாத விசாரணை பிரிவின் பொலிஸ் குழு மற்றும் இராணுவக்குழு அப்பிரதேசத்திற்கு சென்று சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை மீளக்கட்டியெழுப்ப முயற்சிகின்றார் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள சந்தேகநபரை விசாரணைக்கு உட்படுத்திய போதே திலீபனின் சடலம் மறைத்துவைக்கப்பட்டுள்ள விடயம் அம்பலமானது என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

தொடர் உண்ணாவிரதத்தின் பின்னர் மரணித்த புலிகள் அமைப்பில் லெப்டினனட் கேணல் பதவிநிலை வகித்த திலீபனின் சடலம் பழுதடையாத வகையில் மருந்து போடப்பட்டு முள்ளிவாய்க்காலில் பாதுகாப்பாக புதைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு புதைக்கப்பட்டுள்ள தீலிபனின் சடலமானது வெளியில் எடுத்துசென்று பார்க்க கூடிய வகையில் இருப்பதாகவும் முல்லைத்தீவு மாவட்டம் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தில் இருந்த காலத்தில், திலீபன உயிரிழந்த தினத்தை அனுஷ்டிக்கும் போது, அவருடைய சடலத்தை பார்ப்பதற்கு அப்பிரதேச மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள சந்தேகநபர் தெரிவித்துள்ளார்.

திலீபனின் புதைக்குழி இன்னும் பாதுகாப்பாக இருப்பதாக பாதுகாப்பு தரப்பினர் சந்தேகம் கொள்கின்றனர். கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் புலி உறுப்பினர்களில் முக்கியமானவர் வெளியிட்டுள்ள தகவல்களின் அடிப்படையிலேயே இந்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

இந்திய அமைதி காக்கும் படையானது கடந்த 1987 இல் இலங்கை இந்திய அரசு கைசாத்திட்ட ஒப்பந்தப்படி இலங்கையில் அமைதியை ஏற்படுத்த இந்தியாவினால் அனுப்பபட்ட இராணுவமாகும். இந்திய அமைதி காக்கும் படை இலங்கையில் 1987 இன் பிற்பகுதியில் தமது பணிகளை ஆரம்பித்தது. அது இலங்கையில் வந்த காலப்பகுதியில் திலீபன், யாழப்பாணம் நல்லூரில் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதமிருந்து 1987 ஆம் ஆண்டு செப்டெம்பர் 26 ஆம் திகதி உயிர்துறந்தார் .

விடுதலைப்புலிகள் அமைப்பின் மாவீரர் துயிலுமில்லங்களை இடம்தெரியாத வண்ணம் அழித்து அகற்றியுள்ள பாதுகாப்பு தரப்பினர் அவ்வமைப்பின் உறுப்பினரான தியாகி திலீபனின் சடலத்தை வெள்ளமுள்ளி வாய்க்காலில் தேடியுள்ளனர் என்று இணையத்தள செய்திகள் தகவல் வெளியிட்டுள்ளன. (செ-11)

## வவு.கல்...

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது, வயலுக்கு பிரதேச மக்களால் மோட்டார் இயந்திரத்தின் மூலம் நீர் இறைக்கப்பட்டு கொண்டிருந்த வேளையில் சந்தேகத்திற்குரிய குண்டுகளையும் அதனை இயக்கும் கருவிகளையும் அவதானித்த பிரதேச மக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர். இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் அதனை மீட்பதற்கு மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தை சூழ நேற்று மாலை தொடக்கம் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தமை குறிப்படத்தக்கது. (செ-11)

## ஒரே...

பேராதனை போதனா வைத்தியசாலையில் மேற்படி குழந்தை பிரசவம் இடம்பெற்றுள்ளது.

ஐந்து குழந்தைகளில் ஒன்று பெண் குழந்தை எனவும் ஏனையவை ஆண் குழந்தைகள் எனவும் வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குழந்தைகளை பிரசவித்த தாயும் பிள்ளைகளும் பிரசவத்தின் பின்னர் நலமுடன் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (செ-11)

## முகமாலை...

எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தன.

அதன்படி நேற்று மீட்கப்பட்ட எச்சங்களில் பெண் புலிகளது இரண்டு, இலக்க தகடுகளும கண்டுபிடிக்கப்பட்டன.

அவை சோதியா படையணியைச் சேர்ந்த 2784 மற்றும் மாலதி படையணியைச் சேர்ந்த 1190 தகட்டு இலக்கங்கள் ஆகும்.

இதன் அடிப்படையில் இவை சோதியா மற்றும் மாலதி படையணியைச் சேர்ந்தவர்களுடையது என இனங்காணப்பட்டுள்ளது.

கிளிநொச்சி- முகமாலை பகுதியில் மீண்டும் நேற்று சடல எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில், கண்டு பிடிக்கப்பட்ட சடல எச்சங்களுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ சீருடை மற்றும், 10 மகஸீன்கள், 6 கைக்குண்டுகள் ஆகியனவும் மீட்கப்பட்டுள்ளதாக பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்ட சடல எச்சங்கள் முழுமையாக மண்ணுக்குள் புதையுண்டு கிடந்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த சடல எச்சங்களுடன் பெண்கள் பயன்படுத்தும் இரு உள்ளாடைகள் மற்றும் ஒரு பற்பசையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த பற்பசையில் பாவனைக் காலம முடிவுத் திகதி 06.05.1999 என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோன்று விடுதலைப் புலிகள் பயன்படுத்தும் தொப்பியும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சடல எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் முன்னர் போர்க்கால காப்பரண் ஒன்று இருந்துள்ளமையும், அது தகர்க்கப்பட்ட நிலையில்இரு பெண்போராளிகளின் உடலங்கள் புதையுண்டிருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் இதுவரை மீட்கப்பட்ட சடல எச்சங்கள் இரசாயன பகுப்பாய்வுகளிற்காக கொழும்பிற்கு அனுப்பப்படவுள்ள நிலையில், மேற்கொண்டு இன்றைய தினமும் அந்தப் பகுதியில் சோதனை நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளதாக பளை பொலிஸார் தெரிவித்துள்ளதுடன். அந்தப் பகுதிக்கு படையினரின் பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது. (செ-11)

## புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டுதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம் ஆத்திசூடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்திற்கான புதிய ஆலயமொன்று ஆகம விதிகளின்படி நிர்மாணிக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

இதன்படி யாழ்.இந்து மகளிர் வீதியில் (முன்னைய ஆலயத்திற்கு அருகாமை) புதிதாக கொள்வனவு செய்யபட்ட காணியில் புதுப் பொலிவுடன் அமைக்கப்படவுள்ள ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 10 மணிவரையான சுபநேரத்தில் நடத்தப்பட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அந்தண சிவாச்சாரியர்க்ளின் நெறிப்படுத்தலில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் ஆலய அடியார்கள் அனைவரும் பங்கு கொண்டு பயனடையுமாறு பரிபாலனசபைத் தலைவர் க.தபோதரன் கேட்டுக்கொண்டுள்ளார். (செ)


FALC FRENCH LANGUAGE CENTRE
FRENCH CLASSES - பிரெஞ்சு வகுப்புகள்..
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diplomas in French..
818 க்கும் மேற்பட்ட மாணவர்கள் French கற்றுச் சென்றுள்ளனர்..
ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)
கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100 % சித்தியடைந்துள்ளனர்......
ஆரம்பம்:05.07.14 Sat 10.30am. No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்)
ஆரம்பம்: 04.07 Fri 3.30pm. No.181, 1st Floor, Main Street, நெல்லியடி.
021 320 2973
0779 789 456

முதலீட்டாளர்கள் தேவை
யாழ்ப்பாணம் அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் ஆரம்பிக்கப்படவுள்ள இலாபகரமான தொழிற்சாலையொன்றில் • முதலீடு செய்ய - பங்குதாரராக இணைந்து செயற்படவிரும்பும் நம்பிக்கையும் ஆர்வமும் உடையவர்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.
(6827)
விபரங்களுக்கு தொடர்பு கொள்ள: 0777145399

வெளிவந்து விட்டன
G.C.E O/L & A/L க்கான
தொடர்பாடல் ஊடகக் கற்கை நூல்கள்
G.C.E O/L கடந்த கால வினாத்தாள்கள் விடைகள்
G.C.E O/L மாதிரி வினாத்தாள்கள் விடைகள்
G.C.E A/L கடந்த கால வினாத்தாள்கள் மற்றும் மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன்
G.C.E A/L தொடர்பாடல் கற்கை பிரவேசம் வழிகாட்டல் நூல்
ஆசிரியர்/ ஆசிரியவளவாளர்
திரு. V. இராஜேஸ்வரன்
Dip.in.Journalism M.A (Mass Communication)
Cert.in.ToTs-Medialiteracy (NIE, MOE & UNESCO)
Cert in Media Skills (BBc)
அனைத்தும் விற்பனையாகின்றது
பூபாலசிங்கம் புத்தகசாலை
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(6824)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
அனைத்துப் பிரிவுகளுக்குமான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன
BatchI: 02-07-2014 @09.00am, 03.00pm
BatchII: 05-07-2014 @09.00am, 11.00am
BatchIII: 07-07-2014 @09.00am, 04.00pm
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Quick Learning Course (Spoken English with Grammar) 1 1/2 Months
Diploma In English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
எமது கல்லூரியினால் நடாத்தப்படும் சர்வதேசப் பரீட்சைகள்
A1 Exam - Sponsor /Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
◈ U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
◈ எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
◈ சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
◈ நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
◈ ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
IELTS (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது)
We guarantee minimum band 5.0 Upwards 2 1/2 Months
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299939

NJT பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம்
G.A.Q, BA-I, BA (Final) (யாழ்-பேராதனை)
Economics N.தயாபரன்
நாவலர் பட்டப்படிப்புக் கல்லூரி
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
G.A.Q, BA-I, BA (Final) (யாழ்-பேராதனை)
Political Science M. புவனதாஸ்
Economics N.தயாபரன்
ஆரம்பம்-05.07.2014
T.P.NO:- 0752034128
(6832)

A/L CHEMISTRY
▸▸ 1989-1999 MC.Q விளக்கஉரையுடன்கூடிய நூல் (30வது புத்தகம்) பெற விரும்புபவர்கள் SCIENCE CORNER இல் முற்பதிவு செய்யலாம்.
▸▸ 2016 Gases (பிரிவு -I) 11.07.2014
▸▸ 2016-இரசாயன அலை பரீட்சை இல-II 20.07.2014 நடைபெறும்.
ஆசிரியர் சு.சுரேஸ்குமார் Bsc (Hons) MBA(lon)
(6831)
THE SCIENCE CORNER
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

கார் விற்பனைக்கு
KI XXXX எனும்தொடர் இலக்கத்தினை உடைய TOYOTA COROLLA Silver gold கலர் கார் உடன் விற்பனைக்கு உண்டு. (G Limited)
தொடர்புகளுக்கு:-
0778857314, 0774749622
(6822)

புறொயிலர் குஞ்சு விற்பனை
35 நாளில் 2kgக்கு மேல் நிறை எடுக்கக்கூடிய Green Valley புறொயிலர் குஞ்சு விற்பனைக்குண்டு.
விலை:90/=
உயர்தர ஊர்க்கோழிக்குஞ்சு:70/=
தொடர்பு:-0777531344 திருநெல்வேலி
(6828)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org